Approved by the Director of Education, Ceylon
November 16th, 1940

THE PANDAVAS

IN TAMIL PROSE

FOR BOYS AND GIRLS

WRITTEN BY

FRANCIS KINGSBURY, B. A.

1940

Fifty Cents

FIRST EDITION

FIRST IMPRESSION 1939

SECOND ,, 1940

பாண்டவர் கதை

சிறுவர் சிறுமியர்க்கு எழுதிய

தமிழ் வசன நூல்

RATNA STORES
Booksellers & Stationers
180 MALAY St, SLAVE ISLAND

இயற்றமிழ்ப்போதகாசிரியர்

கலைமாணி

பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி

வரைந்தது

2150

முதற்பதிப்பு — இருவது அழுத்தம்

சாவகச்சேரி

இலங்காபிமானி அச்சியந்திரசாலை

விக்கிரம ஹு புரட்டாதி மீ

விலை சதம் 50

All Rights Reserved

முன்னுரை

இந்நூல் சிறுவர்சிறுமியர்பொருட்டு எழுதியது.

மகாபாரதம் வடமொழியிற் பதினெட்டுப் பருவமுடையது. தமிழிற் பெருந்தேவனார் கி. பி. தொள்வது நூற்றாண்டிற் பாரதவெண்பா இயற்றினார். அதிற் சிறிதுபாகமே நம் கைக்கெட்டியது; எஞ்சியவெல்லாம் அழிந்தொழிந்தன. அதன்பின் கி. பி. பதினைவது நூற்றாண்டில் வில்லிபுத்தூரார் விருத்தப்பாவால் மகாபாரதம் வகுத்தனர். இவர், பதினெட்டுப் பருவத்தில் முதற்பத்தையே கொண்டார்; அவற்றுள்ளும் கிளைக்கதைகளை ஒழித்தார். இவரியற்றிய மகாபாரதம் சொற்சுவை பொருட்சுவை கொண்டது. வாசிக்க வாசிக்க மேலும்மேலும் இன்பந்தருவது; ஆயினும் பத்தியரூபமுள்ள இந்நூல் தமிழ்ப்பயிற்சி குறைந்த பலருக்குப் பயன்படாததாயிற்று. கி. பி. பதினெண்மது நூற்றாண்டிற் தோன்றிய நல்லாப்பிள்ளையென்பார் வில்லிபுத்தூரரது நுண்ணறிவையும் கருத்தையும் அறியாது, முதற்பத்துப் பருவத்தில் விட்ட கிளைக்கதைகளையும், பின்னெட்டுப் பருவத்தையும் வில்லிபாரதத்தோடு சேர்த்து, "தமிழ்ப்பாரதத்தைப் பூர்த்திசெய்துவிட்டோம்" என்று மகிழ்ந்தார். மகிழ்ந்துமென்? பயனற்றவையென வில்லிபுத்தூரார் தள்ளியவற்றைப் பயனுள்ளவையென இவர்கொண்டு எழுதியது வீண்வேலையாயிற்று. அன்றியும் வில்லிபுத்தூரரது வாக்குக்கு நல்லாப்பிள்ளைவாக்கு மிகத் தாழ்ந்தது.

பாரதக்கதையை விரித்தும் சுருக்கியும் கத்தியரூபத்திற் செய்தார் பலர். ஆயினும், இந்நூல்கட்கெல்லாம் உள்ளகுற்றம் ஒன்று: இயற்கைக்கு மிஞ்சியும் மாறுபட்டுமுள்ள கதைகளை மெய்க்கதைபோல எழுதியது.

அன்றியும், இவற்றுள் சிறுவர்சிறுமியர் கற்கலாகாத கதைகள் ஆங்காங்கு காணலாம்.

இவற்றையெல்லாம் நீக்கி, கதையைச்சுருக்கி எழுதியது இந்நூல். பெரும்பான்மை இயற்சொல்லும் சிறுபான்மை திரிசொல் வடசொல்லும் விரவியிருப்பதற்குக் காரணம், தமிழ்கற்கப்புகுவோர் புதுச்சொற்களையும், சொற்றொடர்களையும் அறிந்துகொள்ளல்வேண்டும் என்னும் நோக்கமே. இக் கதையுள்வரும் சம்பாஷணையெல்லாம் சமயத்துக்கேற்றபடி கோத்தனவேயன்றி, முதனூல் வழிநூல்களினின்று எடுத்தவையல்ல. ஒரோவிடங்களிற் கதையைத் திரித்தற்குக் காரணம் அறிஞர் தாமே அறிவாராகையால் அவை இவை எனல் அனாவசியம்.

பாரதக்கதையை நாடகமாக நடித்துக்காட்டியதை யான் முதன்முதற் கண்டபோது எனக்கு வயது எட்டு. அதன்பின் அதனை நானும் எனக்கு நேரேமூத்த சோதரனார் சோமசுந்தரனாரும் என்தங்கை சிவபாக்கியவதியும், எந்தையார் *யாயாருக்கு முன்பு நடித்துக்காட்டினோம். எந்தையாரும் யாயாரும் என்னையொழிந்த அவர் பிள்ளைகளும் என்னை உலகிலிருத்தி விட்டுப் போய்விட்டனர். அவர்கள் ஞாபகார்த்தம் இச்சிறு நூலைச் சமர்ப்பிக்கிறேன்.

* யாயார்—என்தாயார். என் ஆய் யாய் என மருவியது.

Francis Kingsbury

கொழும்பு,
வெகுதானிய ௵ மாசி ௴

இருவது அழுத்தம்—முதல்அழுத்தத்தில்உள்ள இரண்டொரு பிழை திருத்தினதேயன்றி வேறொரு மாற்றமும் இதில் இல்லை.

பொருளடக்கம்

அத்தியாயம்	விஷயம்	பக்கம்
	முன்னுரை	iii
1	மரபு; பிறப்பு; இளமை	1
2	அரக்குமாளிகை	8
3	இடிம்பவனம்	11
4	வேத்திரகீயம்	14
5	திரௌபதிதிருமணம்	18
6	இந்திரப்பிரத்தம்	23
7	தீர்த்தயாத்திரை	25
8	சூதாட்டம்	28
9	வனவாசம்	35
10	அஞ்ஞாதவாசம்	37
	கீசகவதம்	39
	ஆனிரைகவர்தலும் மீட்டலும்	42
11	கண்ணன் தூது	46
12	போர்	60
	பிற்கட்டு	72
	பின்னுரை	73

பாண்டவர் கதை

1. மரபு; பிறப்பு; இளமை

இந்துதேசத்திற்குப் பழம்பெயர் பரதகண்டம். பரத கண்டம் பரதன் ஆண்ட பெருநாடு எனப் பொருள்படும். இப்பரதன் துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்தவன். ஆகவே இவன் வேறு, தசரதன்மகன் பரதன் வேறு என்பது தெள்ளிது. பரதன் ஒரு பெருஞ்சக்கரவர்த்தி. இந்துதேசம் முழுதும் அவன் ஆணைக்குள் அடங்கினது என்பர். பரதன் வமிசத்திற் பிறந்தவர் பாரதர். பாரதர்கதை பாரதம் என வழங்கும். நான் இங்கு சொல்லப்புகும் பாண்டவர்கதை பாரதச் சுருக்கமே. பரதன்வமிசத்திற் பிறந்தவருள் குரு என்பான் ஒருவன். அவன் ஆண்டநாடு குருநாடு என்பர். குருவின் சந்ததியார் கௌரவர். ஆகவே கௌரவர் என்னும் பெயர் பாண்டவருக்கும் உரியதேயாயினும் காரணவிடுகுறிப்பெயராய் அது துரியோதனனையுந் தம்பிமாரையுமே குறிக்கும். பாண்டுவின் மைந்தர் ஐவரையும் பாண்டவர் என்பர்.

பரதகண்டத்திலே, குருநாட்டிலே, அத்தினபுரத்திலே, சந்தனு என்னும் அரசன் கங்காதேவி என்னும் பெண்ணை மணந்து தேவதத்தன் என்னும் மகனைப்பெற்றான். பிள்ளை பிறந்த சிலநாளைக்குள் கங்கை இறந்தாள். பல்லாண்டு கழிந்தபின் வேட்டையாடக் கானகஞ்சென்ற வேந்தன் அங்கு உருவமும் அழகும் வாய்ந்த பெண்ணொருத்தியைக் கண்டு அவளை மணக்க விரும்பினான். அப்பெண்ணின் பெயர் பரிமளகந்தி. இவளது தந்தை அரசனைப்பார்த்து, "என் மகளுக்குப் பிறக்கும் புதல்வனே உமக்குப்பின் உமதரசைக்

கைக்கொள்வானென உறுதிமொழி எனக்குத் தருவீரேல் உமக்கு என்மகளை விவாகஞ்செய்து தருவேன்" என்றான். தேவதத்தன்மேல் மாறாத அன்புள்ள சந்தனு அதற்குச் சிறிதும் இணங்கினானில்லை. தான் விரும்பின பெண்ணை மணவாது மன்னன் அத்தினபுரந் திரும்பினன். காட்டில் நிகழ்ந்தனவெல்லாம் தேர்ப்பாகன் சொல்ல அறிந்த தேவதத்தன் அரசனுக்குத் தெரியாமற் காட்டிற்குப்போய், பரிமளகந்தியையும் அவள் தகப்பனையுங் கண்டு, தான் யாரென்று அவர்களுக்கு அறிவித்து, தன்மீதுள்ள பேரன்பினாற்றான் சந்தனு இவர்கள் கேட்ட உறுதிமொழியைக் கொடுக்கவில்லை என்று, பின்னரும் இவ்வாறு கூறுவான்: "ஐயா! என் தந்தையார் கூறப்பின்னிட்ட உறுதிமொழியை நான் இப்பொழுது கூறுகிறேன்: எனக்கு இராச்சியம் வேண்டியதில்லை; ஆகாசவாணியும் பூமிதேவியும் தேவர்களும் அறியச் சத்தியஞ்செய்து கொடுக்கிறேன்; நான் இச்சத்தியத்திற் தவறின், உடனே என்தலைமண்டை ஆயிரஞ் சுக்கலாய்ப் பொடிபடக் கடவது; நீர் சற்றும் ஐயமின்றி நும்மகளை எந்தையாருக்கு மணஞ்செய்து கொடுக்க."

இவ்வாறு வேண்டிய தேவதத்தனது வாய்மொழியைக் கேட்டு வியந்து, பரிமளகந்தியை அத்தினபுரங் கொண்டு போய்ச் சந்தனுமகாராசனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தான் அவள் தகப்பன். கேட்டவர் அஞ்சும் சபதத்தைச் செய்தமையால் தேவதத்தன் வீடுமன் என்னும் பெயர் பெற்றான். இனிமேல்வரும் பாரதக்கதையில் வீடுமனென்ற பெயரே இவனுக்கு வழங்கும்.

சந்தனுவைப்போன்ற தந்தையையும் தேவதத்தனைப் போன்றமகனையும் இவ்வுலகிற் காண்பது அரியவற்றுள் அரிது.

சந்தனுவுக்கும் பரிமளகந்திக்கும் பிறந்த மகன் விசித்திரவீரியன் தந்தையிறந்தபின் அரசனானான். இவனுக்கு மூவர் மைந்தர்: திரிதராட்டிரன், பாண்டு, விதுரன். இவர்களுள் மூத்தவன் திரிதராட்டிரன் பிறவிக்குருடன். ஆகவே ஏற்ற காலத்தில் பாண்டு அரசனானான். திரிதராட்டிரன் காந்தாரியை மணந்து, துரியோதனன் துச்சாதனன் விகருணன் என்னும் புதல்வரையும் துச்சடை என்னும் மகளையும் பெற்றான். துரியோதனன் முதலியோரைக் கௌரவர் என்பர். பாண்டு குந்தியையும் மாத்திரையையும் மணந்து, ஐவர் மக்களைப் பெற்றான். உதிட்டிரன், வீமன், அருச்சுனன், நகுலன், சகதேவன் என்பன முறையே ஐவருக்கும் பெயர். இவருக்கு ஐவர் என்றும், பஞ்சவர் என்றும், பஞ்சபாண்டவர் என்றும், பாண்டவர் என்றும் பெயர்.* ஐவரும் சிறுவராக இருக்கும் பொழுதே பாண்டு இறந்தனன். அதன்பின் திரிதராட்டிரனே குருநாட்டை ஆண்டுவந்தனன்.

பாண்டு இறந்தபின் திரிதராட்டிரன் குந்தியையும் பாண்டவரையும் ஆதரித்துவந்தான். தன் தம்பியின் சிறுவர் ஐவரையும் தன் மைந்தரோடு பலவகைக் கல்வியுங் கற்கும்படி திரிதராட்டிரன் ஒழுங்குசெய்தனன். வீடுமர், துரோணர், கிருபர் என்னும் ஆசிரியர் மூவரும் பாண்டவருக்குங் கௌரவருக்கும் பலகலை ஊட்டினர். இவருட் துரோணாசாரியரும், கிருபாசாரியரும் சாதியிற் பிராமணராயினும் படைக்கலப் பயிற்சியிற் தேர்ந்தவர். துரோணரே வில், வாள், தண்டம், ஆனையேற்றம், குதிரையேற்றம் முதலிய பயிற்சியெல்லாம் பயிற்றுவித்தனர். ஆசிரியர் மாணவரெல்லாரையும் ஓரமின்றி நடத்திவந்தனராயினும் உதிட்டிரன், வீமன், அருச்சுனன்

* 'பாண்டவர்'—பாண்டுவின் மைந்தர்.

தாம் கற்ற பாடங்களைக் கண்ணுங் கருத்துமாய்க் கற்றதினாலும், படைக்கலப்பயிற்சியில் மிகு சாதுரியங் காட்டியமையினாலும், ஆசிரியர்பால் வைத்த அன்பினாலும் அவர் உள்ளத்தைத் தம்வயம் சாயச்செய்தனர். இவர் எல்லாருள்ளும் அருச்சுனனே குருவின் நேசத்தைக் கவர்ந்து கொண்டனன். ஒருகால் நீராடும்பொருட்டு ஆற்றிலிறங்கிய துரோணர்காலை முதலையொன்று பற்றினது. இஃது இப்படி நேரிடுமென்று துரோணர் எதிர்பார்த்திலர். யாதொரு செயலுமற்றுக் கூச்சலிட்ட குருகுஞ்சரத்தை முதலைவாயினின்றுந் தப்புவிக்க அருச்சுனன் விரைந்தோடி வில்லை வளைத்து முதலையின்மீதம்பெய்து மீட்டனன். தன்னுயிரைக் காத்தவனை ஏனையோரினும் மிகத் துரோணர் நேசிப்பின் அது குற்றமாகுமா? மாணவர் கற்கவேண்டிய கல்வியெல்லாங் கற்றபின் இவரை ஆசிரியர் இராசசபையில் அரங்கேற்றுவித்தனர். அப்பொழுதும் உதிட்டிர வீமார்ச்சுனரே மற்றெல்லாரினும் மேம்பட்டு விளங்கினர். கல்வியை முடித்த மாணவர் துரோணருக்குக் குருதட்சிணை சமர்ப்பிக்கவெண்ணுகையில், துராணர் சீஷரெல்லாரையும் பார்த்துப் பின்வருமாறு கூறுவார்: “மாணவர்காள்! உங்களுக்கு நான் படிப்பித்தது பொன்னையிச்சித்தன்று. மகாராசாவின் கருணையினாலே எனக்கும் என்குடும்பத்துக்கும் யாதொரு குறையுமில்லை. ஆயினும் பல்லாண்டு என்னெஞ்சில் வருத்தமொன்றுளது. அதை நீவிர் தீர்ப்பின் அஃதே எனக்குத் தந்த குருதட்சிணையாகும்.”

இதனைக்கேட்ட மாணவர் “குருதேவரே, தங்கள் உள்ளத்தை வருத்துவது இன்னதென்று நாங்கள் தெளியச் சொல்லியருளுக; உடனே அவ்வருத்தத்தைத் தீர்க்க எங்களாலானதைச் செய்வோம்” என்றார். துரோணர்

சொல்லுவார்: “என் இளமைப்பருவத்தில் என் பள்ளிக்கூடத்தில் என் உடன்கற்றவருளொருவன் பாஞ்சால ராசகுமாரன் துருபதன் என்பான். அவனும் நானும், நகமும் தசையும்போல, அருநட்புக் கொண்டோம். என் நண்பன் ஒருநாள் என்னை விளித்து, ‘துரோணா, நாமிருவேமும் பள்ளிக்கூடத்தைவிட்டு நம்நம் ஊர்செல்லினும் நம் நண்பு தணியாதிருத்தல் வேண்டும். நான் இராசனானபின்னும் உன்னை மறவேன். உனக்குக் குறை யாதாயினும் நேரிடின் உடனே நீ அதை எனக்கு அறிவிக்கவேண்டும். அப்படிச் செய்யின் அதை அக்கணமே தீர்ப்பேன்’ என்றான். நாங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து நீங்கி யொருவரை யொருவர் பிரிந்த பின்பும் நான் துருபதனை மறந்தேனில்லை. ஆயினும் அக்காலத்தில் எனக்கொரு குறையுமில்லையாகலின் அவனைக் காணச் சென்றிலேன். இதன்பின் நான் கிருபரின் தங்கையை மணந்தேன். ஏற்றகாலத்தில் எங்களுக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. பிறந்தபிள்ளைக்குப் பால்கொடுக்கத் தாய்க்குப் பாலில்லை. பசுப்பால் கொடுக்கவோ வறிஞன் என்கையிற் காசில்லை. அப்பொழுது, துருபதன் எனக்கு முன்னே சொன்னசொல் என் நினைவில் வந்தது. நான் பாஞ்சாலஞ் சென்றும், இராசனைக்காண்பது இலகுவில் வாய்க்கவில்லை. பலநாள் காத்திருந்தபின், ஒருநாள் இராசதரிசனங் கிடைத்தது. துருபதன் என்னை முற்றும் மறந்துபோனான். நான் பள்ளிக்கூடக்காலத்தில் எங்களிருவருக்கும் நிகழ்ந்த பல விஷயங்களை அவனுக்கு நினைப்பூட்ட முயன்றும் எல்லாம் வீணாயின. ஈற்றில் அவன் என்னை நோக்கி, ‘அவைகிடக்க, நீ இப்பொழுது வந்தகாரியம் யாது?’ என்றான். தாய்ப்பாலில்லாத என் பிள்ளைக்குப் பால்தரும் பசுவொன்று இரந்தேன். அப்பொழுது அவன் என்னை நோக்கி, ‘நீ வந்த

வுடனே இப்படிக் கேட்டனையாயின் பசு ஒன்றல்ல, பத்துக் கொடுத்திருப்பேன். அப்படிச் செய்யாமல் நீயும் நானும் ஒரு பாடசாலையிலே ஓராசிரியரிடத்து உடன்கற்றவரென்றும், அக்காலத்தில் நீயும் நானும் பருந்தும்நிழலும்போல நண்பு பூண்டவரென்றும் இவ்வாறு வேறுபல பொய்க்கதைகளையும் சொன்னாய். ஏழைப் பார்ப்பான் நீ, இராசராசன் நான்; நீயும் நானும் எப்படி ஒருபள்ளிக்கூடத்தில் ஓராசிரியரிடங் கற்பது? நீ படுபொய்யன். உனக்கு நானொன்றும் ஈயேன்; போ போ' என்று என்னைத் துரத்தினான். அப்பொழுது இராசசபையைவிட்டு நான் வெளியே வருமுன் அவனும் அவன் சபையிருந்தாரெல்லாருங் கேட்ப ஒரு சபதஞ் செய்தேன்: என் சீஷனொருவன் துருபதனை யுத்தக்களத்தில் வென்று அவனைத் தேர்க்காலிற்கட்டி என்முன்னே கொண்டு வந்து நிறுத்தும்படி செய்யேனாயின் நான் துரோணனுமல்லன், பிராமணனுமல்லன், நான் கற்ற வித்தையெல்லாம் மறந்தொழிந்துபோகக் கடவேன் என்பதே. இப்பொழுது துருபதனைவென்று தேர்க்காலிற் கட்டி என்முன் கொணர்ந்து நிறுத்துபவனே எனக்கு நான்விரும்புங் குருதட்சிணை கொடுப்பவன்."

இதைக்கேட்ட பாண்டவருள்ளும் கௌரவருள்ளும் ஒவ்வொருவனும் 'நான் இதைச் செய்துமுடிப்பேன்' என்று புறப்பட்டனன். இவர் பாஞ்சாலஞ்சென்று துருபதனைப் போருக்கறைகூவி அவனோடு போர்க்களத்திற் பொருதனரேனும், துருபதன் கௌரவரெல்லாரையும் புறங்கொடுத்தோடச் செய்தனன். பாண்டவருள் அருச்சுனன் துருபதனோடு சமர்செய்து அவனை வென்றபின் அவனைப்பிடித்துத் தன் தேர்க்காலிற் கட்டிக்கொணர்ந்து துரோணர்முன் நிறுத்தினான். உளம்நலிந்து தலைகவிழ்ந்து நின்ற துருபதனைத்

துரோணர் பார்த்து, "உன்சபையில் நான் வந்து ஒரு பாலா இரந்தபோது, நீ உன்னைச் சிங்கமென்று நினைத்தாய்; இப்பொழுதோ நீ ஆணுமல்லை, பெண்ணுமல்லை, அலிபோல் என்முன் நிற்கின்றாய், வெட்கமில்லாதவனே, நீ உன் ஊருக்குத் திரும்பிப்போய் உன்னைப்போல் அலிகளை ஆள், என்முன் நில்லாதே, போ" என்று அவனைத் துரத்தினார். அவன்போனபின் துரோணர் அருச்சுனனைப்பார்த்து, "சீஷரென்றால் எல்லாருஞ் சீஷரா? அருச்சுனனே என் சீஷன்" என அவனைப்புகழ்ந்தார். அருச்சுனனும் உடனே அவரடியில் வீழ்ந்து, "குரவரென்றால் எல்லாருங் குரவரா? துரோணரே என் குரு. துரோணரைக் குருவாகப்பெற நான் என்னதவஞ் செய்தேனோ!" என்று குருதோத்திரஞ் செய்தான்.

பாஞ்சாலத்துக்குத் திரும்பிப்போன துருபதன் நாணமீதூர, "துரோணனைக் கொல்ல ஒரு மகனையும், அருச்சுனனுக்குக் கொடுக்க ஒரு மகளையுந் தவஞ்செய்து பெறுவேன்" எனத் துணிந்து பலநாள் தவஞ்செய்து, திட்டத்துய்மன் என்னும் மகனையும் திரௌபதி என்னும் மகளையும் பெற்றான்.

2. அரக்குமாளிகை

ஆசிரியர்பாற் கற்கவேண்டியஅனைத்துங் கற்றபின் பாண்டவர் கௌரவரோடு அத்தினபுரத்தில் வதிந்துவந்தனர். கௌரவருள் விகருணன் ஒழிந்த ஏனையோர்பாண்டவரிடத்திற் பொறாமையும், அதுகாரணமாகப் பகையுங்கொண்டனர். பாண்டவர் கௌரவருக்கு யாதொரு தீங்கும் இழைத்திலராயினும், கல்வியிலும், படைக்கலப்பயிற்சியிலும் தங்களிலும் பாண்டவர் மேம்பட்டமையும், அதுகாரணமாக ஆசிரியருடைய அன்பைக் கவர்ந்துகொண்டமையும், ஈற்றில் தாம் துருபதனின்முன் இடைந்தோட, பாண்டவருட் பார்த்தனே* அவனைவென்று கொணர்ந்து துரோணர்முன் நிறுத்தினமையுமாகிய இவையே கௌரவரது பொறாமைக்கும் பகைக்குங் காரணம். இவையன்றியும், நாட்டிலும் நகரத்திலுமுள்ளார் பல்கால் பாண்டவரைப் புகழ்ந்து கூறுஞ்சொல்லும் துரியோதன துச்சாதனாதியர்க்கு நடுச்செவியில் நாராசங்காய்ச்சியூற்றியதுபோல் வருத்தியது. இவற்றையெல்லாந் தாங்கவியலாது துரியோதனனுந் தம்பிமாரும் பாண்டவரைத் தொலைக்க ஒரு சூழ்ச்சிசெய்தனர். அஃதாவது, தங்களுக்குத் தெரிந்த சிற்பியொருவனைக்கொண்டு ஓர் அரக்குமாளிகை கட்டுவித்து, அதில் பாண்டவரை இருத்தி, மாளிகையைத் தீக்கிரையூட்டின், அதனோடு பாண்டவரும் செத்தொழிவர் என்பதே. தாமெண்ணியவண்ணம் சிற்பியையழைத்து அரக்குமாளிகை கட்ட ஏவினர். சிற்பி கௌரவரின் எண்ணத்தையறிந்தவனாகையால் அவர்கள் கற்பித்தவண்ணமே அரக்கு

*பிரதைமகன் பார்த்தன்; பிரதை குந்தி 'பார்த்தன்' என்பது அருச்சுனனுக்குக் காரணவிடுகுறிப்பெயர்.

மாளிகையைக் கட்டினும், பாண்டவர்மீதுள்ள இரக்கத்தினாலே அவர் தப்பிப்பிழைக்கும்படி மாளிகைக்குக் கீழே தொடங்கி நெடுந்தூரஞ் செல்லும் சுருங்கையொன்றைச் சமைத்தான். சிற்பி ஒருநாள் வீமனிடம், கௌரவர் சூழ்ச்சி இன்னதென அறிவித்து, இவர் தப்பிப்பிழைக்கும்பொருட்டுத் தான் நிருமித்த சுருங்கையையுங் காட்டி, "இக்கொடியோர் சூழ்ச்சி பயன்படாதொழிக! நும்மை இறைவன் காக்க!" என்று இரகசியத்தை வெளிப்படுத்தினான். இதனை அறிந்த வீமன் இவ்விரகசியத்தை ஒருவருக்குங் கூறிற்றிலன்.

மாளிகை கட்டிமுடிந்தபின் துரியோதனன் உதிட்டிரனைக் கூய், "அண்ணா! நீவிர் ஐவிரும் தாயாரும் இனிது மகிழ்ந்துறைதற்கு ஒரு மாளிகை கட்டியுள்ளேன். அவ்வில்லத்துட் குடிபுகுந்து எங்களையும் நகரத்தார் யாவரையும் மகிழ்விக்கும்படி வேண்டுகின்றேன்" என்றான். சூதொன்றுமறியாத உதிட்டிரன் கௌரவரின் அன்பைமெச்சி ஒரு மங்கள தினத்தில் சுபமுகூர்த்தத்தில் அன்னையோடுந் தம்பிமாரோடுங் கிருகப்பிரவேசஞ் செய்தனன். அதன்பின் சின்னாள் சென்றன. ஒவ்வோரிரவிலும் மற்றவரெல்லாங் கண்ணயர்ந்து தூங்க, வீமன் விழித்திருந்து காத்தனன். ஒருநாள் வீமன் பின்வருமாறு யோசித்தான்: "எத்தனை இரவு உறக்கமின்றி விழித்திருப்பேன்? இவ்விரகசியத்தை வேறு ஒருவருக்குஞ் சொல்லேனென்று சிற்பிக்கு ஆணையிட்டேன். பலஇரவு விழித்தபின் ஓரிரா நான் தூங்குவேனேல் எங்கதி எப்படி முடியும்? சீச்சீ! இஃதெல்லாம் வீண். இதனின் நல்ல யோசனை ஒன்று தோன்றுகிறது. கௌரவர் இவ்வீட்டுக்குத் தீவைக்கும்வரையும் நான் ஏன் காத்திருப்பான்? இரவில் இவரெல்லாம் நித்திரைசெய்கையில் இவரை நானே தூக்கிக் கொண்டுபோய்ச் சுருங்கையின் புறவாயிலில் வைத்துவிட்டு

மாளிகைக்கு எரிவைத்து நானும் தப்பிஓடுவேன். மாளிகை எரிந்து சாம்பராய்க் கிடப்பதைக் காணுங் கௌரவர் யாமுஞ் செத்தொழிந்தோமென நினைப்பர். இஃதே செய்தக்கவினை."

தான் எண்ணியதை எண்ணியபடி செய்துமுடித்தான் வீமன். அரக்குமாளிகை எரிந்து சாம்பரானதைக்கண்ட கௌரவரும் ஊரார் அனைவரும் பாண்டவர் பட்டொழிந்தார் என்றே எண்ணினர். வீமன் குந்திக்கும் தன் உடன்பிறந்தாருக்கும் தான்செய்ததைக்கூறி அதற்குக் காரணத்தையும் விளக்கினான். குந்தியும் உதிட்டிரனும் வீமனைப் பலவாறு புகழ்ந்தனர்.

3. இடிம்பவனம்

சுருங்கையின்புறம்பே வந்த பாண்டவர் தாம் ஒரு காட்டில் இருக்கக் கண்டனர். இவர் காட்டில் வழிநடந்து செல்கையில் வனவாசியொருவன் எதிர்ப்பட்டுப் பலவாறு தீமைசெய்யப் புகுந்தான். வீமன் அவனோடு பொருது அவனைக்கொன்றான். சிலநாழிகை கழிந்தபின் வனமங்கை ஒருத்தி வனவாசி செத்து விழுந்துகிடந்த இடம் வந்து, பிணத்தைத் தழுவி, அழுது புலம்பினாள். அவளது துக்கத்தை ஆற்றச்சென்ற குந்தியைப்பார்த்து அவள் சொல்லுவாள் :

" அம்மே! இவன் என் தமையன். இவன் பெயர் இடிம்பன். என்பெயர் இடிம்பை. எங்களுக்குத் தாய் தந்தையர் இல்லை. எனக்கு உடன் பிறந்தார் வேறு ஒருவரும் இல்லை. இனி என்கதி யாது? நான் அனாதை யானேனே!"

இவ்வாறு கூறியழுத இடிம்பைமேல் குந்தி இரக்கமுற்று, "மகளே! உன் கவலையொழி. உன் அண்ணனைக் கொல்ல நாங்கள் நினைக்கவில்லை. அவனே எங்களுக்குப் பலதீங்கு செய்ய முயன்றான். பின் என்மகன் வீமனைத் தன்னோடு மற்போர் செய்யும்படி அறைகூவினான். இவர் இருவரும் மற்போர் செய்கையில் வீமன் இடிம்பன் கையினின்றும் வேறுவகையாய்த் தப்பமுடியாமல் அவனைக் கொன்றான். ஆயினும் உன் நிலையைக்கண்டு வருந்துகின்றேன். இறந்துபோன இடிம்பனை எழுப்பித்தர என்னால் இயலாது. என்னால் இயன்றதைச் செய்வேன். வீமன் உன்னைமணந்து ஆதரிப்பான். உன்னை ஒருநாளுங் கைவிடான். இஃது உனக்குச் சம்மதமா?" எனக் கேட்டனள்.

அதற்கு இவள்,"அன்னே, என் அண்ணன் இறந்துபோக, எனக்கு வீமன் கணவனாக, மற்றைய நால்வரும் சகோதரராக,

தாயில்லாத எனக்கு நீவிர் தாயாக வருவதை வேண்டா என்பேனோ? ஆயினும் என்னை மனைவியாகக்கொள்வது வீமனுக்கு விருப்பமோ? அறியேன்" என்றனள். 'நீ என்ன சொல்லுகிறாய், வீமா?' என்று தாய்கேட்க, அவன், "அம்மா! நான் என்ன சொல்வது? அண்ணன் இன்னும் விவாகஞ்செய்யாதிருக்க, நான் விவாகஞ்செய்வது சரியோ?" என்றான்.

உடனே உதிட்டிரன், "வீமா, 'தமையன் விவாகஞ் செய்தபின்புதான் தம்பி விவாகஞ்செய்தல்வேண்டும்' என்ற விதி யாங்குள்ளது? அப்படியொரு விதியிருப்பினும் விதிக்கெல்லாம் விலக்குமுண்டல்லவோ? இடிம்பனைக் கொன்றவன் நீயேயாதலின், நீயே இடிம்பையை விவாகஞ்செய்தல் வேண்டும்" என்றான். "அப்படியே ஆகுக" என்று வீமன் சம்மதித்தான். இடிம்பனுக்குச் செய்யவேண்டிய சரம கிரியைகள் எல்லாம் இடிம்பை செய்தாள். சில தினங்கட்குப் பின்பு இடிம்பைக்கும் வீமனுக்கும் விவாகம் நடந்தது. இடிம்பையின் வேண்டுகோளுக்கிணங்கிப் பாண்டவர் ஒரு வருஷகாலம் அவள் வீட்டிற் தங்கினர். இதற்கிடையில் இடிம்பை கடோற்கசனைப் பெற்றாள். இன்னுஞ் சிலகாலஞ் சென்றபின் பாண்டவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டனர். வீமன் இடிம்பையைப் பார்த்து, "நானும் இவர்களோடு செல்லல்வேண்டும். இதனால் உன்னை மறந்தேன் என்றாவது புறக்கணித்தேன் என்றாவது நினையாதே. நீ வேண்டிய நேரம் நான் வருவேன். கடோற்கசனை நீயே வளர்க்க வேண்டும். அவனுக்குத் தக்கபருவம் வரும்போது நான் அவனுக்குக் கற்பிக்கவேண்டியவற்றைக் கற்பிப்பேன். இப்போது எனக்குவிடைகொடு" என்றான்.

குந்தியும் பாண்டவரும் இடிம்பவனம் நீங்கி, வேத்திரகியநகரம் நோக்கிச் சென்றனர். செல்கையில் வேதவியாசர் தோன்றி, "மைந்தர்காள், துரியோதனன் வஞ்சனைக்குத் தப்பி நீவிரும் நுந்தாயாரும் இங்குவந்துசேர்ந்தீர். நீவிர் எல்லீரும் எரியுண்டீரென்றே கௌரவர் எண்ணியிருக்கின்றார். நீவிர் இன்னும் உயிரோடு இருத்தலை அறியின் நுமக்குப் பலதீங்கு செய்வர். ஆகலின் நீவிர் சிறிதுகாலங் கரவுவேடம் பூண்டு, அந்தணர் கோலங்கொண்டு வாழ்மின்" எனப் புத்திசொல்லி அகன்றனர். வியாசர் கூறியவண்ணமே குந்தியும் பாண்டவரும் பிராமணவேடம்பூண்டு வெவ்வேறு பெயர்தரித்து வேத்திரகியம் அடைந்தனர்.

4. வேத்திரகீயம்

பிராமணவேடங்கொண்டு வேத்திரகீயம்புகுந்த குந்தியும் ஐவரும் ஆங்கு ஒரு பார்ப்பனவிதவையின் வீட்டிற் சென்று அவளோடுறைந்தனர். இவ்வாறு சிலபகல் சென்றபின் ஓரிரவு மாலைப்பொழுதிற் பார்ப்பனி மிக வாட்டமுற்றிருந்ததைக் கண்ட குந்தி, "அம்மே! நும்முகம் வாடியிருத்தற்குக் காரணம் யாது? நான் அதை அறியலாமோ?" என உசாவினாள். அதற்கவள், "எவருந் தீர்த்தற்கரிய இடுக்கணுற்று வருந்துகின்றேன். தலைவிதிதடுக்கற்பாற்றோ? அதை நும்மிடஞ் சொல்வதாற் பயனென்?" என்றாள்.

அதற்குக் குந்தி,

'ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்'

என்றசொல் பொய்யாமொழியன்றோ? மார்க்கண்டர் தம் விதியையும் மேற்கொண்டார் என்பர். நும்மை வருத்துவது யாதென எனக்கு அறிவிப்பீரேல், 'துரும்பும் பல்லுக்குத்த உதவும்' என்ற முதுமொழிப்படி யானும் ஒருகால் நும் இடர் களையினுங்களையலாம். வாய்திறந்து சொன்மின்" என வேண்டினள். பார்ப்பனி, "என் இடர் நீக்க நும்மாலாகாதெனினும் நீர் வேண்டியவாறே சொல்கின்றேன்.

"இப்பட்டணத்துக்குப் புறம்பே ஒரு கொடியன், பகன் என்னும் பெயரினன், உறைகின்றனன். அவன் பிறப்பில் மனிதனேனும் குணத்திற் புலிபோல்வான். இவன் மகனூன் தின்னி. ஒவ்வொருநாளும் இப்பதியிற்புகுந்து ஆடவர் அரிவையர், சிறுவர் சிறுமியர் பலரை இரக்கமின்றிக் கொன்று தின்றுவந்தான். அவனை வெல்வார் ஒருவருமிங்கிலர். அவன் கொடுஞ்செயலைத் தாங்கமுடியாத நகரத்தார் ஒருங்கே திரண்டு

அவன்பாற்சென்று அவனடியில் வீழ்ந்து, 'ஐய! எமக்கருள் புரிதி; எம்மேற் சிறிது இரங்கு; இனியொருநாளும் எங்கள் நகர்க்குள் நீ வரவேண்டா. நாடோறும் நினக்குப் பல்வகை நைவேத்தியம் நிவேதிப்பதோடு, மகப்பலியிடுவேம். ஒவ்வொரு பகலிலும் உச்சிப்பொழுதில் நகருக்கு வெளியேயுள்ள மலையடிவாரத்தில் நீ வரின், ஆங்கு சமைத்தசோறும் கறிவகைகளுங் கொண்டுவந்து நிற்கும் புருஷனொருவனைக் காண்பாய். அவனைக்கொன்றுதின்று அன்னபானாதிகளையும் உண்டுசெல். இவ்வாறு பிரதிதினமுஞ்செய்யத் தவறினேமேல் நீ உன்னிஷ்டப்படி செய்யலாம்' என்று வேண்டினர். பகன் அதற்கிசைந்து ஊரவர் அனுப்பும் உணவையும் மனிதனையுந் தின்று வருகின்றான். ஊரில் காளைப்பருவமுள்ள வாலிபர் அனைவரும் கூட, அவரில் எவன்றலைக்குத் திருவுளச்சீட்டு விழுகின்றதோ அவன் அடுத்தநாள் அன்னபானாதிகளைக்கொண்டு பகனிடஞ்சென்று அவனுக்கு அவற்றையெல்லாம் ஊட்டித் தானும் இரையாதல் வேண்டும். இன்று பகல் சீட்டு என்மகன்மேல் விழுந்தது. நாளைக்கு அவன் பகனுக்கு இரையாதல் திண்ணம். அவனைத்தவிர எனக்கு வேறுபிள்ளைகள் இல்லை. நான் கைம்பெண். எனக்கு வேறு துணையுமில்லை. இஃதே என் வருத்தம். நீர் வருந்திக் கேட்டமையின் உமக்கிதைச் சொன்னேன். நீர் என்செய்வீர்? வேறு யாரென்செய்வர்?" என்று புலம்பினாள். இவற்றையெல்லாங்கேட்ட குந்தி யாதொன்றும் பேசாது, அரை நாழிகை யோசித்தபின் முகமலர்ந்து இவ்வண்ணங் கூறுவாள்:

"அம்மே! என்னை இக்காலத்தில் இங்கு கொண்டுவந்தது இறைவனருள். உமக்கு உதவிசெய்வதே அவன்சித்தம். அவனருளால் நானே உம்மிடர் களைவேன்" என்றாள். இதைக்கேட்ட பார்ப்பனி குந்தியை ஏறஇறங்கப்பார்த்து,

“அம்மா! நம் புத்தி நிலையிற் கலங்கியதுபோலும்! யார் எப்படி என்னிடர் களையக்கூடும்?” என்றனள். அதைக் கேட்ட குந்தி, “எனக்குப் பூரண சித்தசுவாதீனமுண்டு, என் புத்திகலங்கவில்லை. கேண்மின், நீயிர் கைம்பெண்; நானுங் கைம்பெண். உமக்கு மகன் ஒருவன். அவனையன்றி வேறு பிள்ளைகள் உமக்கில்லை. எனக்கோ ஐவர்மக்கள் உளர். அவருள் ஒருவன்சென்று இறந்துபடினும், நால்வர்மக்கள் மிஞ்சியிருப்பர். ஆகவே நாளைக்குப் பகனிடஞ்செல்பவன் நம் மகனல்லன், என்மக்களிலொருவன்” என்றாள். பார்ப்பனி, “உனக்குப் பித்து என்றேன்; நீ பிச்சியல்லையாயின் நீ மிகக் கொடியை. ஏழை விதவையென்னை இந்நிலையிற் பரிகாசஞ்செய்வது உனக்கு அழகோ? சீச்சீ! நீயொரு பெண்ணல்லையோ? பகிடியை விடு” என்று சீறினள். “அம்ம, ஏனிவ்வாறு கலங்குகின்றீர்? உமது நிலையில் உம்மைப் பரிகாசஞ்செய்ய யாருக்கு மனம்வரும்? நான் பிச்சியுமல்லேன், கொடியேனுமல்லேன். யான் சொல்லியது சத்தியம் சத்தியம், முக்காலுஞ் சத்தியம்” என்றாள் குந்தி. பிராமண விதவை, “அம்மா, கழிபேரிரக்கத்தினால் நீ இவ்வாறு கூறுகின்றனை; ஆயினும் நாளை உன் புதல்வன் மடிந்தபின் அத்துயரந் தாங்குவாயோ? கையில் விரல் ஐந்துளவேனும் அவற்றில் ஒன்றைத் தறிக்கச் சம்மதிப்பரோ? மக்கள் ஐவரிருப்பினும் அவருளொருவனை இழக்கத் தாயொருத்தி சம்மதிப்பாளோ? அறிந்தேன், அறிந்தேன். உன் பிள்ளைகள் ஐவரில் முதல் மூவரும் நீ பெற்ற பிள்ளைகள். உன்சாயலை அவர்களிற் காணலாம். இரட்டையர் நின் பிள்ளைகளல்லர். அவர்களில் ஒருவனைக் கொல்லக் கருதினை போலும்! துரோகி! தாயில்லாப்பிள்ளையைக் கொல்லலாமோ? நீ மனுஷப்பிறப்பினளோ?” என்று வைதாள். குந்தி,

“அம்ம, நீர் கூறியது மெய்யே; இரட்டையர் என் பிள்ளைகளல்லர், என் *சக்களத்தி பிள்ளைகள். ஆயினும் அவர்களிலொருவனையன்று, என்வயிற்றிற்பிறந்த பிள்ளை ஒருவனையே நான் நாளைக்கு அனுப்புவேன். நீர் பேசினது எல்லாம் போதும். நான் நினைத்ததைச் செய்துமுடிப்பேன். பொழுது விடிந்தவுடனே அன்னபானாதிகளை எல்லாம் ஆயத்தம் பண்ணித் தாரும். என் மக்களில் ஒருவன் அவற்றை எடுத்துக்கொண்டு போவான்” என்றாள். இதைக்கேட்ட பார்ப்பனி சிறிதுநேரம் பேசாதிருந்து, அடியற்ற மரம்போல வீழ்ந்து குந்தியின் கால்களைப்பிடித்து, “என்னைக் காக்கவந்த தெய்வம் நீ; உன்னை அறியாது நான் பேசின கொடுஞ்சொல் எல்லாவற்றையும் நீ எனக்கு மன்னிக்கவேண்டும். இப்படிப் பட்ட செயல் முன் ஒருபோதுமில்லை, இனி நடப்பதுமில்லை. நாவலந்தீவுள்ளநாளெல்லாம் நின்பெயர் நின்று நிலவுக! ஏழையெனக்கு நீ பாராட்டுங்கருணைக்குக் கைம்மாறுசெய்ய நினைப்பினும் நான் துரோகியாவேன். கடவுள் நினக்கருள்புரிக” என்று அழுதாள். அடுத்தநாள் உச்சிப்பொழுதில் உணவு கொண்டு மலைச்சாரலுக்குச்சென்ற வீமன், தான் கொண்டு போன அன்னபானாதிகளைத் தானே உண்பதைக் கண்ட பகன் கோபத்தோடு ஓடிவந்து, “யாரேடாநீ?” என்றான். “யாரேடா நீ?” என்றான் வீமன். உடனே இருவருக்கும் மற்போர் தொடங்கியது. நெடுநேரம் ஒருவனுக்கொருவன் இடையாமற் போர்செய்தபின், ஈற்றில் வீமன் பகனைக்கொன்று சயசிங்க நாதத்தோடு வேத்திரகியத்துக்கு மீண்டான். நடந்த வரலாற்றை அறிந்த ஊரார், மலைச்சாரலுக்குச்சென்று வீழ்ந்து கிடந்த பகனதுபிணத்தைக்கண்டு, அதைத் தகனஞ்செய்தனர். பின் நகரத்தார் வீமனை வாழ்த்தினர். சிலநாட்சென்றபின் குந்தியும்மக்களும் வேத்திரகீயம்விடுத்துப் பாஞ்சாலம் அடுத்தனர்.

* ஸஹகலத்ரம் என்னும் சங்கதச்சொல் தமிழிற் சக்களத்தி ஆயிற்று.

5. திரௌபதி திருமணம்

அருச்சுனன் மற்றைநால்வரோடும் தாயோடும் அரக்கு மாளிகையில் எரிந்துபட்டான் என்று கேள்வியுற்ற துருபதன், "ஐயோ! நான் என்செய்வேன்? என்மகளை அருச்சுனனுக்குக் கொடுக்கும்பொருட்டே தவஞ்செய்து பெற்றேனே!" எனக் கலங்கி, 'எல்லாம் இறைவன்செயல்' எனத்தேறி, திரௌபதிக்குச் சுயம்வரம் என்று இராசசபைகளுக்கெல்லாம் ஓலைபோக்கினன். மணவோலையைக்கண்ட மன்னரெல்லாம் பாஞ்சாலனது சபையை நாடினர். இவ்விஷயத்தைப் பாண்டவருங்கேட்டுத் தாமும் பாஞ்சாலனது நகரஞ் சேர்ந்தனர். அன்னையை ஒரு சத்திரத்திலிருத்தி, தாம் ஐவரும் பிராமண வேடத்தோடு சுயம்வரமண்டபத்துட் புகுந்து ஒருபுறம் ஒதுங்கி, நடப்பதைக் காணும்படி வாளாவிருந்தனர். வேந்தரெல்லாங் குழுமிய அவையில் துருபதனும் திட்டத்துய்மனும் புகுந்தனர். துருபதன் தன் ஆசனத்தில் இருந்தபின் திட்டத்துய்மன் எழுந்துநின்று சபையைநோக்கி, பின்வருமாறு கூறுவான்: "முடிமன்னரே, இராசகுமாரரே, பிரபுக்களே, கேண்மின். என் தங்கை திரௌபதியை எந்தையார், பார்த்தனுக்கு மணஞ்செய்துகொடுக்க எண்ணியிருந்தார். 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது.' அருச்சுனன் இறந்துபட்டான். ஆகவே இச்சுயம்வரத்துக்கு நும்மை அழைத்தோம். இச்சபாமண்டபத்தின் முன்றிலில் ஒரு மச்சயந்திரம் கட்டித்தூங்கக் காண்பீர். அவ்வியந்திரத்துக்கப்பால் ஐம்பது விற்கணை தூரத்தில் முதுகுகாட்டி நின்று, அதனை அம்பால் எய்து வீழ்த்துபவன் எவனோ அவனுக்கே பாஞ்சாலி மாலைசூட்டுவாள்" என்றான். இதனைக் கேட்டபின்

ஒருவர் ஒருவராய் முடிமன்னரும் அரசிளங்குமரரும் முன்றிலிற் சென்றார். மச்சயந்திரத்தையும் ஐம்பது விற்கணை தூரத்தையும் பாராமல் முதுகுகாட்டி எய்தல்வேண்டும் என்பதைக்கேட்ட பலர் "இது வீண்வேலை, இதிற் பிரவேசித்தல் வெட்கத்துக்கிடமாம்" என்று வாளாபோயினர். அம்பெய்யத்துணிந்தவர் சிலரே. அவர்களுட் துரியோதனன் அம்பு மச்சயந்திரத்துக்கு ஒருமுழத்துக்கு அப்பால் வீழ்ந்தது; கன்னன் எய்த அம்பு மச்சயந்திரத்திற் பட்டதேனும், அதைத் தரையில் வீழ்த்தத் தவறியது; மற்றையோர் அம்பெல்லாம் வீணேசென்றன. சபையில் வந்திருந்த அரசருள் ஒருவரும் யந்திரத்தை வீழ்த்தினாரில்லை. அப்பொழுது உதிட்டிரன் எழுந்துநின்று திட்டத்துய்மனை நோக்கி, "அரசரேயன்றி அந்தணரும் இச்சுயம்வரத்திற் பங்குபெறலாமோ?" என உசாவினன். திட்டத்துய்மன், "இச்சுயம்வரம் இராசகுமாரருக்கென்றே தொடங்கியது. இங்குவந்த இராசருள் எவரும் மச்சயந்திரத்தை வீழ்த்திலர். ஆகவே அந்தணருள் எவனேனும் மச்சயந்திரத்தை முறைப்படி அம்பாலெய்து வீழ்த்த வல்லனேல் அவனைப் பாஞ்சாலி மாலைசூட்டுதற்குத் தடையில்லை" என்றான். உடனே உதிட்டிரன் அருச்சுனன்மேற் கடைக்கண்சாத்த, அவனெழுந்து காண்டீவத்தை* இடதுகையிற் பிடித்துக் குறித்தவிடஞ் சென்று நின்று யந்திரத்துக்கு முதுகுகாட்டி அதை ஓர் அம்பாலெய்து வீழ்த்தினன். உடனே திரௌபதி பிராமணனுக்கு மாலைசூட்டினள். இதனைக்கண்ட அரசரெல்லாம் வெட்கிப் பொறாமையடைந்து, "அரசரில் ஒருவருஞ் செய்ய முடியாததை ஒருபிராமணப்பதர் செய்துமுடித்தானெனின்

* அருச்சுனன் வில்லுக்குப் பெயர் காண்டீவம்.

இதைவிட வேறு அவமானம் உண்டோ? இவ்வேதியன் பாஞ்சாலியை மணக்க நாம் விடுவதில்லை" எனத் துணிந்து, மறையவனை நோக்கி,

"எட பார்ப்பான், நீ திரௌபதியை மணக்க யாம் விடோம். இவளை விட்டுவிட்டு வெளியே செல்" என உரப்பினர். துருபதனுந் திட்டத்துய்மனும், "நீவிர்செய்வது அடாதது. 'அடாதது செய்வார் படாதது படுவார்.' நுமக்கென் இங்குவேலை? பேசாதகன்மின்" என்றார். அதற்குக் கன்னன், "பாஞ்சாலா! நீ அருந்தவஞ்செய்து பெற்ற கொழுந்தினை இப்போது மதியிழந்து ஒரு பிராமணப் பதருக்குக் கொடுக்கத் துணிவையேல் யாம் பார்த்துக்கொண்டிருத்தல் நெறியன்று. இப்பிராமணன் திரௌபதியை மணக்க யாம் விடோம்" என்றான். அப்போது அருச்சுனன், "இது நும் கருத்தாயின் வம்மின். மச்சயந்திரத்தை வீழ்த்தினவில் என் கையிலுள்ளது" என்றான். இதையிவன் சொல்லிமுடிக்குமுன் உதிட்டிரன் மற்றை மூவரோடும் அருச்சுனனைவளைந்துநின்று, "நாங்களும் நால்வேம் உளேம்; வம்மின் போருக்கு" என்றான். திட்டத்துய்மன், "என்னையும் என்படையையும் வென்றபின் அன்றோ நும்மோடிவர் போர் புரிவது. நீவிர் அஞ்சற்க" என்றான். அதற்கு உதிட்டிரன், "ஐய, இங்குவந்துள்ள மன்னர் படைகொடு வந்தாரில்லை. படையிலா வேந்தரை வந்தவிடத்து நீ படைகொடு பொருதல் நேரிதன்று. நின்துணை எமக்கு வேண்டா. இவர் ஆண்மையுடையரேல் எம் ஐவேமையும் பொருதுவெல்க" என்றபின், வந்த மன்னரை நோக்கி, "வம்மின் போருக்கு" என்றான். ஐவர் ஒருபக்கமும் ஐம்பதின்மர் ஒருபக்கமும் நிற்கப் போர் தொடங்கிற்று. ஈற்றில் நாற்பத்தொன்பதின்மரும் புறங்காட்டியோடக் கன்னன் தனித்துநின்று, "யான் ஒருவன்,

நீவிர் ஐவிர்; வாரும், பொருவாம்" என்றனன். உடனே உதிட்டிரன், "யாம் ஐவேம், நீ ஒருவன். நின்னோடு யாம் ஐவேமும் பொருதல் நேரிதன்று, திரௌபதியின் மாலை பெற்றவனே நின்னோடு போர்புரிவன்" என்னவே, நால்வரும் பின்வாங்கினர். அருச்சுனனுங் கன்னனும் விற்போர் செய்ததிற் கன்னன் தோற்றான். ஆங்கு இருந்த அரசர்கூட்டம், "அறிந்தேம், அறிந்தேம். இவ்வைவரும் வேதியரல்லர், பாண்டவர். மச்சயந்திரத்தை வீழ்த்தியவன் அருச்சுனன்" என்று முழங்கியது. உடனே உதிட்டிரன் கைகூப்பிநின்று, "நீவிர் சொல்லியது உண்மையே. யாம் வேதியர் அல்லேம், பாண்டவரே; மச்சயந்திரத்தை அம்பால் எய்துவீழ்த்தியவன் அருச்சுனனே" என்று வெளிப்படுத்தினான். உடனே துருபதன் உவகைபூத்து இறுமாப்புற்று அருச்சுனனை ஆலிங்கனஞ்செய்து, "என் தவம் பொய்த்திலது. நினக்கென்றே இவளைப் பெற்றேன். நீயே இங்கு இவளைக் கொண்டாய். என்கருத்து நிறைவேறியது" என்றான்.

கன்னனும், "உய்ந்தேன், உய்ந்தேன். பிராமணனொருவனுக்குக் கன்னன் தோற்றான் என்ற வசைமொழி எனக்கு இல்லை" என்று மகிழ்ந்தான். துரியோதனனும் துச்சாதனனும், "ஐயோ! பாண்டவர் பட்டொழிந்தார் என்று பூரித்திருந்தோமே! நாம் செய்த உபாயமெல்லாம் அபலமாய்ப் போயினவே; இவரையொழிக்க வகையில்லையோ?" என்று பெருமூச்செறிந்தனர்.

துருபதன் அருச்சுனனையும் பாஞ்சாலியையும் ஆசீர்வதித்து அனுப்பினன். பாண்டவர் ஐவரும் திரௌபதியோடு சத்திரத்தை அடைந்து வாயிலில் நின்று, "அன்னே! ஒருகனி கொண்டுவந்தேம், கடைதிறமின்!" என்றார். உள்ளே இருந்த குந்தி, "கொணர்ந்த கனியை நீவிர் ஐவிருமுண்மின்"

என்று கதவைத்திறந்தனள். ஆங்கு தன் மக்களோடு நின்ற பெண்ணொருத்தியைக்கண்டு, "ஆ கெட்டேன்! யாது சொன்னேன்?" என்று ஏங்கினள். அருச்சுனன் அவளைப் பார்த்து, "அன்னாய்! ஏங்கற்க, நீவிர் சொன்னபடியே செய்வேம். 'தாய்சொற் றுறந்தொரு வாசக மில்லை.' பாஞ்சாலி எம் ஐவேமுக்கும் மனைவியாவள்" என்றான்.

அப்போது நாரதமுனிவர் ஆங்குவந்து, பின்வருமாறு கூறுவார்: "பிள்ளைகாள்! நீவிரைவிரும் ஒருயிர்போல இதுகாறும் வாழ்ந்தீர். ஆகவே நீவிர் ஐவீரல்லீர். ஐவிரும் ஒருவரே. ஆகவே பாஞ்சாலி ஐவருக்கன்று, ஒருவருக்கே வாழ்க்கைப்படுகின்றாள். ஆயினும் இவ்வோருயிருக்கு ஐந்துடலிருப்பதால் இவை ஒன்றுக்கொன்று பிழைசெய்யாது ஒவ்வோராண்டு ஒவ்வோருடல் இவளை அனுபவிக்க. இவள் இவ்வாண்டு அருச்சுனனோடு வாழ்க. அடுத்தவருஷம் இவள் நகுலனுக்குரியள். பின் சாதேவனுக்கு; அதன்பின் உதிட்டிரனுக்கு; அதற்கடுத்தவருஷம் வீமனுக்கு. இவ்வாறே நீவிர் அழுக்காறின்றி வாழ்க."

பின் ஆசிகூறிச் சென்றனர் நாரதர்.

6. இந்திரப்பிரத்தம்

அரக்குமாளிகை எரியுண்டபோது அதிற் குந்தியும் ஐவரும் மடியவில்லையென்றும் அவரெல்லாரும் உயிரோடிருக்கின்றாரென்றும் பாண்டவர் திரௌபதியைமணந்து மகிழ்வோடு காலங்கழிக்கின்றனரென்றும் கேள்விப்பட்ட திரிதராட்டிரன், "இப்போது இவருக்கு என்னசெய்யலாம்?" என்றாலோசித்தான். "வஞ்சகம் ஏதேனுஞ்செய்து இவர்களைக் கொல்லல் வேண்டும்" என்றான் துரியோதனன். "நேரிற் போர்செய்து இவரை மடிவிக்கவேண்டும்" என்றான் கன்னன். வீடுமர், விதுரர், துரோணர் முதலிய பெரியோர், "இராச்சியத்தை இரண்டாகப்பிரித்து அதில் ஒருபிரிவைப் பாண்டவருக்குக் கொடுப்பதே தகுதி" என்றார். இவர் சொல்லையே திரிதராட்டிரன் அங்கிகரித்தான். தம்பியின் மனைவியையும் பிள்ளைகளையும் திரௌபதியையும் திரிதராட்டிரன் அத்தினபுரத்துக்கு அழைத்து, அவரை அன்போடு உபசரித்தான். சில நாட் சென்றபின் நாட்டை இருகூறாக்கி, ஒருகூறு பாண்டவருக்குக் கொடுத்தான் திரிதராட்டிரன். அதற்குப் பெயர் காண்டவப்பிரத்தம். இது மறுகூற்றினும் நிலவளத்திலும் நீர்வளத்திலும் தாழ்ந்தது. ஆயினும் அதனைப் பாண்டவர் திருததியோடு ஏற்றனர். ஏற்றபின் அருச்சுனன் கண்ணன் உதவியால் அங்கிருந்த காண்டவவனத்தை அழித்துத் திருத்தி நாடாக்கினன்.

குந்தியின் தமையன் வசுதேவன் மகன் கண்ணன், யதுகுலத்தான். வசுதேவனுக்கு அவன் மனைவியர் இருவருள் உரோகிணிபாற் பலராமனும், தேவகிபாற் கண்ணனும் சுபத்திரையும் பிறந்தனர். வசுதேவன் இறந்தபின் இவர் தம் பழம்பதி மதுரையைவிட்டுத் துவாரகைக்குச்சென்று அங்கு வாழ்ந்தனர். பலராமன் அரசனானான். அவன்தம்பி

கண்ணன் அவனுக்கு மந்திரி. கண்ணன் உருக்குமிணி, சத்தியபாமை, இராதை முதலிய பலபெண்களை மணந்தான். இவன் இளமைப்பருவந்தொடங்கிப் பாண்டவர்பால் நேயம் பூண்டவன், அவருள்ளும் அருச்சுனனுக்கு உற்றதோழன். இவன் உதவியாற்றான் அருச்சுனன் காட்டை அழித்து நாடாக்கியது.

தமக்குக் கிடைத்தநாட்டுக்குத் தலைநகராக இந்திரப்பிரத்தம் என்னும் அழகியபட்டணம் சமைத்தனர். இப்பதி மாடமாளிகை கூடகோபுரங்களாற் பொலிவுற்றது; ஒவ்வொரு பக்கத்திலும் செய்குன்றுகளும் சிங்காரவனங்களும் தடாகங்களும் அழகூட்டின. பட்டணங் கட்டிமுடிந்தபின் உதிட்டிரன் *இராசசூயயாகஞ் செய்தான். யாகந் தொடங்குமுன் உதிட்டிரன் கௌரவரை அழைத்தான். அழைப்புக்கிணங்கித் துரியோதனன் துச்சாதனன் முதலியோர் வந்தனர். நாட்டின் அழகையும் நகரத்தின் சிறப்பையும் அரமனையின் பொலிவையும் பாண்டவர்வாழ்வையும் கண்ட துரியோதனனது நெஞ்சம் பொறாமையென்னுந்தீபற்றி எரிந்தது. "தங்க வீடொன்றுமின்றிப் பிராமண யாசகவேடங்கொண்டு திரிந்த முக்கட்பதடிகளுக்கு வாய்த்த சீருஞ்சிறப்பும் என்னை? ஊனக்கண்ணோடுஉளக்கண்ணுமிழந்த எந்தையின் அறியாமையாலன்றோ இவர்கள் நாடுபெற்றதும் நகரங்கண்டதும்! இவை போதாவென்றோ இராசசூயமும்? இவர் இவை எல்லாவற்றையுமிழந்து வனவேடர்போலக் காட்டிலுறையச்செய்யேனேல் என்பெயர் §சுயோதனன் அன்று" எனப்புழுங்கின நெஞ்சத்தோடு துரியோதனன் அத்தினபுரத்துக்குத் திரும்பினன்.

*இராசசூயமென்பது, ஓரரசன், தனதுநாட்டைச்சூழ்ந்த நாடுகளின் மன்னர் தன்தலைமையை ஒப்புக்கொண்டபின், செய்யும் யாகம்.

§கௌரவருள் மூத்தானுக்கு இயற்பெயர் சுயோதனன் என்பதுவே.

7. தீர்த்தயாத்திரை

இராசசூயம் முடிந்து சிலபகல் கழிந்தபின் அருச்சுனன் புண்ணியதீர்த்தங்களெல்லாம் ஆடிவர விருப்புற்று, தாயது விடையும் உதிட்டிரன் விடையும் பெற்று, தன்னந்தனியனாய்ப் புறப்பட்டான். கங்கை, இயமுனை, சிந்து, பிரமபுத்திரன், நருமதை, கோதாவரி, காவேரி, வைகை, தாமிரவருணி முதலிய நதிகளிலெல்லாந் தீர்த்தமாடினன். பாண்டிநாட்டிலே சித்திராங்கபாண்டியன்மகள் சித்திராங்கதையைக்கண்டு காமுற்று, அவளை அவள் தந்தை தனக்குக் கொடுக்க மணந்து, ஓரியாண்டு *மதுரையிற் தங்கியபின் சித்திராங்கதையையும் அவளுக்குப்பிறந்த மகனையும்விட்டு, தென்குமரிசென்று, கடலிரண்டு கலக்குஞ் சங்கமத்திலே நீராடியபின் வடதிசை திரும்பினன் பார்த்தன். அங்கே மேலைக்கடலோரத்திலுள்ள துவாரகையை நோக்கிச் சென்றான். ஆங்கு, கண்ணனுக்கிளையாள் சுபத்திரையின் உருவையும் வனப்பையும் முன்பலமுறை கண்ணன்சொல்லக் கேட்டுளான். இப்பொழுது அவளை மணக்க விரும்பித் துவாரகை நோக்கி வந்தான்; துவாரகைக்கு வெளியே ஒரு வனத்திலே தங்கி, தான்வந்திருப்பதைக் கண்ணனுக்கு அறிவித்தான். கண்ணன் வனத்துக்குச்சென்று அருச்சுனனைக்கண்டு, அவன் வந்தநோக்கத்தை அறிந்தபின், அவனுக்குக்கூறுவான்:

"அருச்சுன, கேள். நல்லகாலத்தில் வந்தாய். துரியோதனன்பால் மிக அன்புள்ளான் என் அண்ணன். அவனுக்கே என்தங்கையை விவாகஞ்செய்துகொடுப்பது பலராமன்

*ஈண்டுகூறிய மதுரை தமிழகத்திலே பாண்டிநாட்டிற்குத் தலைநகர். கண்ணன்பிறந்த மதுரை ஆரியவர்த்தத்திலுள்ளது. இது வேறு, அது வேறு.

எண்ணம். அஃது என் தங்கைக்கு விருப்பமில்லை. உன்னையே மணக்க விரும்பியுள்ளாள் சுபத்திரை. அவளெண்ணமும் உன் மனோரதமும் நிறைவேறச்செய்வது என்கடமை. ஆயினும், யார் என்னசொன்னாலும் பலராமன் கேளான். தான் நினைத்ததையே முடிக்க நாடுவான். ஆகையால் தந்திரஞ்செய்தே நங்காரியத்தை முடிக்கவேண்டும். நான்சொல்லும் புத்தி கேள். நீ ஒரு சந்நியாசிவேடம்பூண்டு இவ்வாலமரத்தின்கீழ் யோகஞ்செய்பவனைப்போல் கண்மூடியிரு. நான் பலராமனை இங்கே கூட்டிவருவேன். துறவிகளை உபசரிப்பதில் ஊக்கமுள்ளவன் பலராமன். உன்னை அரமனைக்கு வரும்படி அழைப்பான். மனமில்லாதவன்போல் மறுத்து, பின் அவன் வேண்டியபடியே உடன்படு. உனக்குப் பணிவிடைசெய்யும்படி சுபத்திரையை உன்பால் அனுப்புவன். நீயாரென்பதைச் சுபத்திரைக்கும் முதலில் அறிவியாதே. இன்னும் எழுநாட் கடந்தபின் இந்நகரத்துக்குப் புறம்பே ஒரு திருவிழா நடக்கும். அதற்குப் பலராமன் போவன். ஊரார் அனைவருஞ் செல்வர். அப்பொழுது நீ யாரென்பதும் நீ வந்தநோக்கம் இஃதென்பதும் சுபத்திரைக்குத் தெரிவி. சுபத்திரை உன் எண்ணத்தை மாறாள். நானும் அப்பொழுது வந்து உங்களுக்கு உதவிசெய்வேன். பலராமன் இல்லாதகாலத்தில் நீ அவளை ஒரு தேர்மேலேற்றிக்கொண்டு செல்லல்வேண்டும். பின் நீவிருவிரும் *காந்தருவ விவாகஞ் செய்துகொள்ளலாம்.

* கொடுப்பார் ஒருவருமின்றி, சாட்சிகளெவருமின்றி, சடங்குகளொன்றுமின்றி, ஆடவனொருவனும் மடந்தையொருத்தியும் தம்முள் ஒத்து, கடவுளொருவரே சாட்சியாக, ஒருவருக்கொருவர் வாக்களித்துப் புணரும் புணர்ச்சியே காந்தருவமணம் என்பர். மனத்திற் சுத்தமுள்ளாரே இவ்வகை மணத்துக்குரியவர். ஏனையோருக்கு இஃது உரியதன்று.

நான் இப்பொழுது சொல்லுஞ் சொற்படி நடக்க இம்மி தவறுவையேல், பலராமன் துரியோதனனுக்குச் சுபத்திரையைக் கொடுப்பது சத்தியம்."

இதைக்கேட்ட அருச்சுனன், "கண்ணா! நீ முன்னே பலமுறை சொன்ன காரியங்கள் என் மனத்துக்கு விருப்பமில்லையேனும் உன்னைப் பிரியப்படுத்த நீ சொன்னபடியே செய்துளேன். அப்படிப்பட்டநான் இப்பொழுது என் காதலி சுபத்திரையை மணப்பதற்கு நீ கூறும் புத்திமொழியை அலட்சியஞ் செய்வேனோ?" என்றான்.

பின் கண்ணன் பலராமனை முனிவரிடம் கொண்டுவர, முனிவர் அரமனைசெல்ல, ஆங்கு முனிவருக்குச் சுபத்திரை பணிவிடைசெய்ய, திருவிழாவுக்குப் பலராமனும் நகரத்தாரும் புறம்போக, அருச்சுனசந்நியாசி சுபத்திரைக்குத் தன்னை வெளிப்படுத்த, அவளும் இணங்க, கண்ணன் இருவரையுங் கூட்டித் தேரிலனுப்ப, துவாரகைக்குப் புறம்பே வனத்திலே சுபத்திரையும் அருச்சுனனும் காந்தருவவிவாகஞ் செய்துகொண்டு இந்திரப்பிரத்தத்தையடைந்தனர். அருச்சுனனுக்குஞ் சுபத்திரைக்கும் அபிமன்னு என்னும் இளஞ்சிங்கம் பிறந்தான்.

8. சூதாட்டம்

இந்திரப்பிரத்தத்தில் பாண்டவர் சிறப்போடு வாழ்வதைக் கண்டு பொறாமையுற்ற துரியோதனன் அத்தினபுரஞ்சென்று மிக வருந்தியிருந்தான். அகத்தின்நோயை முகத்திற்கண்ட அவன் மாமன் சகுனி, "உன்முகம் வாடியிருப்பதென்னை?" என்று துரியோதனனைக் கேட்டான். துரியோதனன் தன் நெஞ்சிலிருந்தது முழுவதையுஞ் சகுனிக்குத் தெரிவித்தான். சகுனியைக் கபடத்துக்கும் வஞ்சகத்துக்கும் உருவென்னலாம். ஆயினும் இவன் துரியோதனன்பால் மெய்யன்பு பூண்டவன். தன் மருமகன் துயரத்தை எவ்வாற்றானாயினும் களையத்துணிந்த சகுனி துரியோதனனுக்குச் சொல்லுவான்: "உதிட்டிரன் கவறாடுவதில் விருப்புடையயன். ஆயினும் கவறிலெட்டுணையேனுஞ் சமர்த்தனல்லன். கவறாடும்படி நாம் அவனை அழைப்பின் உடனே வருவன். பின் அவன் நாடு நகரங்களையெல்லாம் நாம் பறித்துக்கொண்டு அவனையும் தம்பிமாரையும் நசிக்கலாம். இதுவே யான் சொல்லும் புத்தி."

இவ்வாறு சகுனிசொன்னதைத் துரியோதனன் தந்தைக்கறிவித்தான். அவன் மற்றவரோடு இதைக்குறித்து ஆலோசித்தபோது, விதுரர், "சூது பஞ்சமாபாதகங்களில் ஒன்று, அதை விரும்புவார் நாசமுறுதல் திண்ணம்" என்பதை வற்புறுத்தினார். அவர் கூறிய கூற்றின் உண்மையையறிந்தும் திரிதராட்டிரன், துரியோதனன்மேல் வைத்த காதலால், சூதாடவரும்படி பாண்டவரை அழைக்க விதுரரையே அனுப்பினான். விதுரர் இது தம் எண்ணத்துக்கு மாறுபட்ட காரியமாயினும், அரசன் சொல்லைத்தட்ட மனமின்றிப் போதற்கிசைந்தார். போனவர் திரிதராட்டிரன் அழைப்பைப் பாண்டவருக்குத் தெரிவித்தபின், சூதாடுவதினால் வருந்தீங்கையும்

விஸ்தரித்து விளம்பினார். அப்போது உதிட்டிரன், "சூதால் விளையும் இத்தீங்கெல்லாம் அறிந்திருந்தும் அரசன் சொல்லை மறுத்தற்கஞ்சி எம்மை அழைக்க நீவிர் வருவீரேல், யாம் மகாராசாவினது சொல்லைத்தட்டுவதெப்படி? அவர் சொல்லுக்கிணங்கல் வேண்டும்" என்று, தம்பிமாரோடும் திரௌபதியோடும் அத்தினபுரஞ்சென்றனன். தன்னிடம்வந்த பாண்டவரைத் திரிதராட்டிரன் அன்போடு உபசரித்தான். அடுத்த நாள் சபையிலே துரியோதனனுக்கும் உதிட்டிரனுக்கும் சூதாட்டந் தொடங்கியது. துரியோதனன், "எனக்குப் பதிலாளாக என் மாமனார் சகுனி ஆடுக" என்றான். இரு பக்கமும் *ஒட்டம்வைத்துச் சூதாடத்தொடங்கினர். சகுனி கள்ளச்சூதாட, உதிட்டிரன் நாடுநகரங்களையுஞ் சேனைகளையுஞ் செல்வப்பொருளையும் ஒவ்வொன்றாகத் தோற்றான். தோற்கத் தோற்க, பொய்ம்மானம் மிகமிக, உதிட்டிரன், இயற்கையறிவும் கல்விகேள்விகளால் வந்த அறிவும் மறைய, தம்பியரையும் ஒவ்வொருவனாகத் தோற்றான்; தோற்றபின் தன்னையுந்தோற்றான். விதுரர் முதலிய பெரியோரெல்லாம் "ஆடியது போதும்; நிறுத்துக கவறு" என்றார். உதிட்டிரனோ கட்குடியன் கள்ளால் மயங்கினும் பின்னுங் கள்ளையே விரும்புதல் போல வெறிகொண்டு, "திரௌபதியிருக்கின்றாள், அவளையும் ஒட்டம் வைத்தாடுவேன்" என்றான். இவ்வாட்டமுந் தோற்றனன். உதிட்டிரன் தோல்வியடையுந்தோறும் அகம் மிக மகிழ்ந்த துரியோதனன், உதிட்டிரன் ஈற்றில் பாஞ்சாலியை ஒட்டம் வைத்து ஆடிய ஆட்டமும் தோற்றதைக்கண்டு, உவகையென்னும் மதுக்கடலில் மூழ்கி, மதியிழந்து, ஏவலாளரை நோக்கி, உதிட்டிரன் சூதாடியதும் அதில் அவன் நாடு

*ஒட்டம்-பந்தயப்பொருள்

நகரங்களையுஞ் செல்வத்தையுந் தம்பியர் நால்வரையும் தன்னையும் அவளையுந் தோற்றதும் திரௌபதிக்கு எடுத்துக்கூறி, அவளைச் சபைக்கு அழைத்துவரும்படி சொன்னான். ஏவலாளர்போய் இவையெல்லாவற்றையுந் திரௌபதிக்குச் சொல்லி, அவளைச் சபைக்கு வரும்படி துரியோதனன் அழைத்ததையுஞ் சொன்னார். அவள், "உதிட்டிரர் என்னைத்தோற்றபின் தம்மைத் தோற்றாரோ? தம்மைத் தோற்றபின் என்னைத் தோற்றாரோ?" என வினவினள்.

அதன் விபரத்தை அறியாத ஏவலாளர் சபைக்கு மீண்டு வந்து அவள்கேட்ட கேள்வியைத் துரியோதனனுக்குச் சொன்னார். "தன்னைத்தோற்றபின்பே அவளைத்தோற்றான் உதிட்டிரன் என்று அவளுக்குச் சொல்லுங்கள்" என அவரை அவள்பால் மறுபடியும் விடுத்தான் துரியோதனன். அவர் சொன்னதைக்கேட்ட திரௌபதி, "உதிட்டிரர் தம்மைத் தோற்றவுடனே துரியோதனனுக்கு அடியார் ஆனார். அடியான் ஒருவன் சுவாதீனமுள்ள ஒருத்தியை ஒட்டம்வைத்தாட அதிகாரமிலன். ஆகவே நான் ஒருவனுக்கும் அடியாளல்லேன். என்னைச் சபைக்கு வரும்படி கட்டளையிடத் துரியோதனனுக்கு அதிகாரமில்லை. இதை அவனுக்குச் சொல்லுங்கள்" என்றாள். ஏவலாளர் சென்று அவள்கூறியதைச் சொற்றனர். இதைக்கேட்ட துரியோதனன், கோபாவேசத்தனாய், "பொதுமகளுக்கு மனுமுறையேது? சாமர்த்தியப்பேச்செல்லாம் அவளைக்கண்டு மயங்குவார்க்கன்றோ? துச்சாதனா, நீபோய் அவளை அழைத்துவா. வாராளேல் அவளை இழுத்துவா" என்றான். துச்சாதனன்சென்று முன்னே ஏவலாளர் சொன்னவற்றையெல்லாம் மீண்டுஞ் சொல்லி அழைத்தான். திரௌபதியும் முன்னே ஏவலாளருக்குச் சொன்னதையே மீட்டுஞ் சொற்றனள். "ஏவலாளரை அனுப்பி அனுப்பி

விட்டதுபோல என்னையும் அனுப்பலாமென்று நினையாதே. நின்னையெப்படியும் வேத்தவைக்குக் கொண்டுசெல்வேன்" என்றான் துச்சாதனன். உடனே திரௌபதி காந்தாரிபாலோடி, "ஓலம், ஓலம், நுமக்கு நானடைக்கலம்; என்னைக் காத்தருள்க" என்று இரந்தாள். காந்தாரியோ, "ஏன் அஞ்சுகின்றனை? நினக்கு யார் தீங்குசெய்வார்? மைத்துனன் அழைத்தாற் போவதற்குக் கூச்சமேன்! போ போ" என்று விடை பகர்ந்தாள். இப்படிக் காந்தாரி பேசுகையிற் துச்சாதனன் அவளைப்பிடிக்க நெருங்கினான். அவன் நெருங்குவதைக்கண்ட திரௌபதி ஓடினாள். ஓடுகையில் அவள் அளகம் குலைந்து அவிழ்ந்து வீழ்ந்தது. பின்னே வந்த துச்சாதனன் அவள் கூந்தலை இறுகப்பற்றி இழுத்துக்கொண்டு இராசசபைக்குச் சென்றான். வேடன்கையில் அகப்பட்ட மான்போலச் செயலிழந்து வாளாசென்றனள் திரௌபதி. துச்சாதனன் வேத்தவைநடுவில் இவளை நிறுத்தினான். ஆங்கு வீற்றிருந்த அவையினரைப் பாஞ்சாலி கண்டு தொழுது, "ஐயன்மீர், அறங்கிடந்த நெஞ்சத்தீர், கலையெலாங் கசடறக்கற்றுணர்ந்தீர், துரியோதனனும் துச்சாதனனுஞ் செய்வது நுமக்குஞ் சம்மதந்தானோ? யான்செய்த பிழையாது? என்கணவனார் தம்மைத் தோற்று ஒருவருக்கு அடியாரானபின்பு சுவாதீனமுடைய என்னைப் பந்தயம்வைத்தாட அவருக்கு அதிகாரமுண்டோ? இக்கேள்விக்குத் தக்கவிடைசொல்ல வல்லார் ஈண்டிலரோ? உளரேல் அவர் மௌனஞ்சாதித்தற்குக் காரணம்யாதோ? அரசன் சீறுவானென்று அஞ்சியோ?

"'நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு'

என்றாரன்றோ? அரசனையிடித்துக் கழறவல்ல அமைச்சர் ஈண்டிலரோ?" என விண்ணப்பஞ் செய்தனள். வீடுமர்,

விதுரர், துரோணர், கிருபர் ஆதியோர் வாய்திறந்திலர். ஆயினும் பாஞ்சாலிக்குச்செய்யும் அநீதியைக் காணலாற்றாத விகருணன் என்னும் இளையான், "பெரியீர்! பாஞ்சாலி கூறுவது நும்காதில் வீழ்ந்திலதோ? கூந்தல் வீழ்ந்துசோர, இரண்டு கண்ணினின்றும் அருவிபோற்பாயும் கண்ணீரை நீவிர் கண்டிலீரோ?

'அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை'

என்பதறிந்திலீரோ?" என உடலம்நடுங்க, வாய்பதற, சினமும் நாணும் இரக்கமும் மீதூரப் பேசினான். இவன் கூறியும் பெரியார் பேசிலர். கன்னன்மட்டும், "விகருணா, 'நிறைகுடம் தளும்பாது.' 'பச்சோலை ஒலியாது.' இச்சபையில் பிஞ்சிற் பழுத்த நீதான் பேசத்தலைப்பட்டாய். சீச்சீ! அடங்கியிரு" என்றான்.

இதன்பின் துரியோதனன் துச்சாதனனைப்பார்த்து, "வேசைக்கு வெட்கமுண்டோ? வெட்கமில்லாமற் குரைக்கின்றாள் இங்கு. இவளைத் துகிலுரிந்து நிருவாணியாக நிறுத்து. அதற்குமுன் ஒருகணப்பொழுது இவள் என் தொடையில் இருக்க" என்றான். இவற்றையெல்லாங்கேட்ட பாண்டவருள், வீமன் கதையை நோக்கினான்; வில்லை நோக்கினான் பார்த்தன்; உதிட்டிரன்மனம் தீப்பட்ட நெய்போல் உருகியும் அவன் *அற்றம்பார்த்தான். திரௌபதி, "ஏடபாதகா, நின்தொடையிலிருக்கச் சொன்னாயோ என்னை? நின் தொடையெலும்பு ஒடிய, தசைசிதற, செம்புனல் கொப்பளிக்கச் சாவாய்நீ" என்று சீறினாள். துச்சாதனன் அவை நடுவில் அவளை நிறுத்தித் துகிலுரிய ஆரம்பித்தான்.

* அற்றம்—சமயம்

"அருகணுகி மடவாரை அஞ்சாமற் துகிலுரிவான்
அடர்ந்தபோதில்
இருகைநறு மலர்குவிய எம்பெருமான் இணையடிக்கே
இதயம் வைத்தாள்."

"ஆறாகி இருதடங்கண் அஞ்சனவெம் புனல்சோர,
அளகஞ் சோர,
வேறான துகில்தகைந்த கைசோர, மெய்சோர,
வேறோர் சொல்லும்
கூறாமல், 'கோவிந்தா கோவிந்தா' என்றரற்றி,
குளிர்ந்து நாவில்
ஊறாத அமிழ்தூற, உடல்புளகித் துள்ளமெலாம்
உருகி னாளே."

"அருமறைசொல் லியநாமம் ஆயிரமும் உரைத்தழைக்க,
[அமரர் போற்றும்
திருமலர்ச்செஞ் சேவடியோன் திருச்செவியில் இவள்
[மொழிசென் றிசைத்த காலை,
மருமலர்மென் குழல்மானின் மனம்நடுங்கா வகைமனத்தே
[வந்து தோன்றி,
கரியமுகி லனையானும் பிறரெவர்க்குந் தெரியாமல்,
[கருணை செய்தான்."

வேண்டுவார் வேண்டுவனவற்றை அருளுங்கடவுள் ஏழைப் பெண்ணின் நிலையைக்கண்டு அவள் பிரார்த்தனையைக் கேட்டருளினார். துகிலுரியப்புகுந்த துச்சாதனனது இரண்டு கையுந் திடீரெனச் சோர்வுற்றன. அவன் கையை நீட்டவும் முடக்கவும் முடியாது செயலற்றுப் பித்தன்போல நின்றான். 'தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?'

என ஐயமுற்ற விகருணன்மனம் 'தெய்வமுண்டு, தெய்வமுண்டு' எனத்தேறிக் களித்தது. திரிதராட்டிரன், "ஐயோ! துச்சாதனனுக்கு விளைந்தது யாது? துரியோதனா, மடையா, சூதாட்டம் வேண்டா என்று நான் அன்றுசொல்ல, கேட்டாயில்லை. விடு பாண்டவரையும் பாஞ்சாலியையும். விடாயேற் கெடுவாய்; கெடுவேன் யானும்; கெடும் இக்குலம்; கெடும் இந்நாடும்" என்றான். திரௌபதி, "உதிட்டிரரைமட்டும் விட்டாற்போதும். அவர் மறுசூதாடி எங்களை விடுவிப்பர்" என்றாள். அதற்குத் துரியோதனன் இணங்கி, உதிட்டிரனை அடிமை நீக்கினான். உதிட்டிரன் சகுனியோடு மறுசூதாடி, பாஞ்சாலியையுந் தம்பிமாரையும் மீட்டனன். எல்லாவற்றையும் மீட்பனோ என்று அஞ்சின துரியோதனன், "போதும், போதும்; பாண்டவரும் பாஞ்சாலியும் பன்னீராண்டு கானகம் வதிந்து, பின் ஓராண்டு எவருமறியாமல் நாடுறைந்து, பின் ஈண்டு வருவரேல் அவர் இழந்த நாடுநகரங்களையும் செல்வத்தையும் மீட்டுங்கொடுப்பேன். ஓர் ஆண்டு மறைந்து வாழ்கையில் அறியப்படுவரேல், மீட்டும் பன்னிருவருடம் வனவாசமும் ஒருவருடம் அஞ்ஞாதவாசமும் செய்தல் வேண்டும்" என்றான். அவையிருந்தார் யாவரும், "அங்ஙனமே ஆகுக" என்றனர். பாஞ்சாலியோ, "அவ்வண்ணமே செய்வோம். ஆயினும் பதின்மூன்றுவருஷம் முடிந்தபின் துரியோதனனது இரத்தத்தையெடுத்து என் கூந்தலிற்பூசி அதை முடிக்குமட்டும் என் கூந்தல் விரிந்திருக்கும்" என்றாள். வீமன், "துரியோதனனையும் துச்சாதனனையும் என்கதைக்கு இரையாக்கேனேல் என் பெயர் வீமனன்று" என்றான். அருச்சுனன், "கன்னனைக் கொல்லேனேல் என் காண்டீவத்தை முறித்து எறிந்துவிடுவேன்" என்றான். பின் ஐவரும் பாஞ்சாலியும் தவவேடம் பூண்டு காட்டுக்கேகினர்.

9. வனவாசம்

குந்தியை விதுரர்வீட்டிலிருத்திவிட்டு, சுபத்திரையையும் அபிமன்னுவையும் கண்ணனிடம் அனுப்பிவிட்டு, ஐவருந் திரௌபதியும் வனஞ்சென்றார்கள். அங்குள்ள முனிவர்பலர் இவரைத் தேற்றத் தேறி, அமைதியோடு காலங்கழித்து வந்தனர். பின்வரும் யுத்தத்தில் கௌரவரை வெல்லும் பொருட்டு வரம்பெற அருச்சுனன் தவஞ்செய்தற்குச் சென்றான். ஏனையோர் வனத்திலுள்ள பல புண்ணிய தீர்த்தங்களுக்குச்சென்று அவற்றுட்படிந்து, பல விரதம் அனுட்டித்துக் கடவுளைப் பணிந்தனர்.

பாண்டவர் காமியவனத்தில் உறையுங்காலத்தில் ஒரு நாள் சிந்துதேசத்தரசன் சயத்திரதன், வேட்டையாடக் காட்டுக்குச் சென்றவன், அங்கு திரௌபதி தனித்திருப்பதைக் கண்டு மோகங்கொண்டு அவளை வலாற்காரத்தோடு தூக்கிச் சென்றனன். சிறிதுநேரஞ்சென்றபின் பாண்டவர் திரும்பி வந்து தம் ஆச்சிரமம் திரௌபதியின்றி வெறுமையுற்றுக் கிடக்கக்கண்டு, ஆயுதபாணிகளாய் அவளைத் தேடிச்சென்றனர். பாண்டவரைக்கண்ட சயத்திரதன் அவரோடு பொருது தோற்று, திரௌபதியை விட்டுவிட்டு ஓடினன். உதிட்டிரன் திரௌபதியை அழைத்துக்கொண்டு ஆச்சிரமத்துக்கு மீண்டனன். வீமன் சயத்திரதனுக்குப்பின்னே ஓடி, அவனைப் பிடித்து அடித்து நிலத்திற்றள்ளி உதைத்துப்புரட்டினன். பின் தான் செய்த பிழையைப் பொறுக்குமாறு சயத்திரதன் வேண்ட, வீமன் அவன்செய்த குற்றத்தை மன்னித்து, "உயிர்தப்பி ஓடிப்போ" என்று விட்டுவிட்டனன்.

அருச்சுனனுக்குச் சுபத்திரைபாற் பிறந்த அபிமன்னு தன் மாமன் பலராமன் மகள் சசிரேகையை மணக்கவிரும்பியும்

பலராமன் அவளை அவனுக்குக் கொடுக்க மறுத்தனன். எப்படியும் அவளைத் தானே மணக்கவேண்டும் என்று துணிந்த அபிமன்னு, வீமன்மகன் கடோற்கசன் உதவியால், அவளைப் பலராமன் அரமனையினின்று தூக்கிச்சென்று, தன் தாய் சுபத்திரையிடத்தில் அடைக்கலமாக வைத்தனன். அதன்பின் சசிரேகையும் அபிமன்னுவை மணக்கவிரும்பினதைக்கண்ட சுபத்திரை கண்ணனை அழைத்து, அவன்முன் அபிமன்னுவுக்குஞ் சசிரேகைக்கும் விவாகஞ்செய்து மகிழ்ந்தனள். இது நிகழ்ந்தது பாண்டவர் வனவாசஞ்செய்த காலத்தில்.

பன்னிருயாண்டு காட்டிலுறைந்தபின் ஓர்யாண்டு நாட்டில் எங்கேனுங் கரந்துறையும்படி பாண்டவரும் திரௌபதியும் சூழ்ச்சிசெய்தனர்.

10. அஞ்ஞாதவாசம்

தாம் மறைந்துவாழுங்காலத்திலும் அறுவரும் ஒருவரைவிட்டொருவர் நீங்காது உடன்வாழல்வேண்டுமென்றும் அவ்வாறு தாம் வாழ்தற்கேற்றவிடம் விராடநாட்டு மன்னன் கோயிலே என்றும் பாண்டவர் துணிந்தனர். காட்டுக்கு வெளியே விராடநாட்டின் எல்லையிலிருந்த ஐயனார்கோயில் முன் நின்ற ஒரு மரத்தின் வேரருகே பள்ளந்தோண்டி, அதில் தம் படைக்கலங்களையெல்லாம் புதைத்துவிட்டு ஐவரும் பாஞ்சாலியும் வேற்றுருக்கொண்டு, தனித்தனியே ஒவ்வொருவரும் விராடநாட்டு மன்னன்பாற் சென்றனர். பிராமண வேடம்பூண்ட உதிட்டிரன் கங்கபட்டன் என்னும்பெயர் கொண்டு, தான் பாண்டவரோடு வனத்திற் பன்னிருயாண்டு கழித்தவனென்றும், அவருக்குத் தருமோபதேசஞ்செய்வதும் ஒழிந்த வேளையில் உதிட்டிரனோடு சதுரங்கமாடுவதும் தன் தொழிலென்றும், இப்போது பாண்டவர் அஞ்ஞாதவாசஞ் செய்யச் சென்றமையால் தான் அங்கு வந்தனனென்றுஞ் சொன்னான். விராடன், "இவ்வருடம் நீவிர் என் சபையிலிருக்க" என வேண்டினன். வீமன் சுயம்பாகிவேடம் பூண்டு, பலாயனன் என்னும்பெயரோடு, தான் மடைத்தொழிலில் நளனையொத்தவனென்றும், தன்னை ஆதரிப்பாரில்லாமையால் அங்கு வந்தனனென்றுங் கூறினான். "அரமனைச் சுயம்பாகிகளெல்லாருக்கும் நீ தலைவனாகுக" என்று அவனை எற்றுக்கொண்டான் மன்னன். அருச்சுனன், ஒரு பேடியுருவந்தாங்கி, "என்பெயர் பிருகன்னளை ; நான் ஆடல்பாடல்களில் வல்லேன். அரமனையிலுள்ள இராசகுமாரிகளுக்கு ஆடலும்பாடலுங் கற்பிக்க வல்லேன்" என்றான்.

"என்மகள் உத்தரைக்கு ஆடலும் பாடலும் கற்பிக்கக் கடவை" எனப் பேடியை நியமித்தனன் வேந்தன். நகுலன், "நான் பரிமருத்துவன், அரமனையிலுள்ள குதிரைகளையெல்லாம் நோயின்றிக் காப்பேன் என்றான். என் குதிரைகளையெல்லாம் உன்வசம் ஒப்பித்தேன்; அவற்றைக் காப்பது உன் கடமையாம்" என்றான் விராடன். சாதேவன், "ஆனிரை புரத்தல் என்தொழில். எனக்கு இவ்வரமனையில் வேலையுண்டோ?" என்றான். "என் ஆனிரையனைத்தையும் கா நீ" என்று பணித்தனன் அரசன். திரௌபதி விரதசாரணி என்னும் பெயரோடுவந்து, நான் வண்ணமகள்*; எனக்கு அந்தப்புரத்தில் வேலைகிடைக்குமோ?" என்று வினவினள். "அரசிக்கு வண்ணமகளாகுக நீ" என்று அவளையும் ஏற்றுக்கொண்டனன் அரசன். இவ்வாறு அறுவரும் விராடன் அரமனையில் உத்தியோகம் பெற்றனர். இவர் இன்னாரென்று யாரும் அறிந்திலர்.

* சீமாட்டிக்கு ஆடையாபரண அலங்கிருதம் செய்யும் பணிப்பெண்ணே வண்ணமகள்.

11. அஞ்ஞாதவாசம் (தொடர்ச்சி)

கீசகவதம்

விராடன் மனைவிபெயர் சுதேட்டிணை. அவளுக்கு ஒரு தம்பி. அவன்பெயர் கீசகன். கீசகன் வடிவும் அழகுமுடையன், சரீரபலமுடையன், அவனை ஓராண்சிங்கம் என்னலாம்; ஆயினும் சுகுணனல்லன், மிருககுணமுடையன். இவன், தமக்கையின் வண்ணமகளைக்கண்டு மோகித்தான். அதனால் அவனுக்குக் காமசுரம் நிகழ்ந்தது. தன் தம்பி நோய்வாய்ப்பட்டான் என்றறிந்த அரசி, அவன் பள்ளியறையிற்சென்று பல சிகிச்சைகளைச் செய்தாள். ஒன்றும் பயன்படவில்லை. ஒருநாள் கீசகன், "நான் பசியால் வருந்துகிறேன்; நான் அருந்தச் சிற்றுண விரும்புகின்றேன்; என் நாவுக்கிதந்தரும் சிற்றுண்டி சில சமைத்து உன் வண்ணமகளிடங்கொடுத்து எனக்கு அனுப்பு" என்றான். "அப்படியே செய்வேன்" என்றுசொல்லிப்போன சுதேட்டிணை சிற்றுண்டி சமைத்து வண்ணமகளிடங்கொடுத்து, கீசகனுக்கனுப்பினாள். நெஞ்சிற் களங்கமில்லா வண்ணமகள் சிற்றுண்டியைக் கீசகன் பள்ளியறைக்குக் கொணர்ந்தாள். தன்னந்தனியளாய் வந்த வண்ணமகளைக் கண்ட கீசகன், இதுவேதருணமென எண்ணி, தன் மனக்குறிப்பை அவளுக்கு உணர்த்தினான். அவள், "இஃதென்னை கொடுமை? 'புலியது பசித்திடிற் புல்லைத் தின்னுமோ?' நீர் பிரபு, நான் ஏழை வண்ணமகள். அன்றியும் நான் கன்னியல்லேன், விஞ்சையா ஐவர் என் கணவர்; நீர் சொல்லும் இக்கேள்வியைக் கேட்பின் நும்மை இன்றே கொன்றுவிடுவர். நுமக்கேற்ற இராசகன்னியர் பலருளர், அவருள் ஒருத்தியை மணந்து சுகித்திருக்க" என்றனள்.

இவள் சொல்லிய இதோபதேசம் கீசகன்காதில் நுழையவில்லை. அவன் காமவசத்தனாய்ப் பலவாறு பிதற்றினதுமன்றி அவளைப்பிடிக்க எழுந்தான். அவன் பிடிக்ககப்படாமல் வண்ணமகள் ஓடினாள். அவளைத்தொடர்ந்து ஓடினான் கீசகன். இருவரும் சுதேட்டிணையின் அந்தப்புரஞ்சேர்ந்தனர். தமக்கையைக் கண்டவுடன் சிறிது வெட்கி ஒருபுறத்தில் நின்றனன் கீசகன். விரதசாரணி அரசியைக் கண்டவுடன் கோவென்றலறி நடந்ததெல்லாஞ் சொன்னாள். சுதேட்டிணை இயல்பிற் சுகுணியாயினும் தம்பிபாலுள்ள அன்பால் விரதசாரணியைப் பார்த்து, "எம்பி தீயனல்லன், எம்பி ஒரு நம்பி; அவன் விளையாட்டிற்குக் கூறியிருக்கலாம், நீ அதை மெய்யென்றெண்ணினை! போ, போ; உன்னையேன் அவனுக்கு?" என்றாள்.

கீசகன் எண்ணத்தினின்று தன்னைக் காக்க அரசியால் இயலாதென்றுகண்ட வண்ணமகள் வேத்தவைபுகுந்து அனைவருக்கும்முன்னே இதை அறிவித்தாள். ஆங்கிருந்த கங்கபட்டர், "வண்ணமகளே, அஞ்சற்க; நின் கணவர் விஞ்சையர் ஐவருஞ் செத்தாரல்லர்; நினக்கு யாதொரு தீமையுமுறாது; வீணே கவலற்க, ஏகுதி" என்றார். பின்பு இவள் பலாயனனை இரகசியத்திற் கண்டு எல்லாம் அறிவித்தாள். அவன் இவளை நோக்கி, "நீ கீசகனிடஞ்சென்று அவனெண்ணத்துக்கு இணங்கினவள்போலப் பாவனைசெய். 'இன்றிரவு நடுயாமத்தில் நகர்ப்புறத்தேயிருக்கும் காளிகோயிலுக்கு நீ வரின், உன் மனோரதத்தை நிறைவேற்றுவேன்' என்றுசொல். உன்னைப்போற் பெண்வேடம்பூண்டு நான் அங்குசென்று அவனைக் கொல்வேன்" என்றான். அவ்வண்ணமே வண்ணமகள் கீசகனுக்குக்கூற, காமாந்தகனாகிய அவன் காளிகோயிலுக்குச்சென்று, வீமன்கையால் மாண்டான். கீசகன் மடிந்

ததை அடுத்தநாள் ஊராரறிந்து விராடனுக்கும் சுதேட்டிணைக்குந்தெரிவித்தார். விரதசாரணி, "என்கணவர் ஐவர் விஞ்சையரில் ஒருவன் செயல்போலும்இஃது" என்றனள். இதனைக் கேட்ட சுதேட்டிணை, "இப்படிப்பட்ட உன்னை நானெப்படி வைத்திருப்பது? நீ என்னைவிட்டு அகலல்வேண்டும்" என்றனள். விரதசாரணி, "அம்மே! இதுகாறும் என்னை ஆதரித்தீர்; என் விரதம்முடிய இன்னும் பதின்மூன்றுநாள்; அதன்பின் என்கணவர் ஐவரும்வந்து என்னை அழைத்துச் செல்வர். அதுவரையும் என்னையகற்றாது காத்தருள்க" என்றாள். "அங்ஙனமே ஆகுக" எனப் புகன்றாள் சுதேட்டிணை.

12. அஞ்ஞாதவாசம் (தொடர்ச்சி)

ஆனிரைகவர்தலும் மீட்டலும்

பாண்டவரது அஞ்ஞாதவாசம் தொடங்கிய காலம்முதல் அவர் எங்கு கரந்துறைகின்றனர் என்றதையறியும்படி ஒற்றர் பலரைப் பலவிடங்களுக்கும் அனுப்பின துரியோதனன், ஒற்றர் கூறியவுரையெலாங்கேட்டு, “பாண்டவர் விராடனது நாட்டில் மறைந்து வாழ்கின்றனர்போலும்” என ஐயுற்று, “நான் என் படையிற் சிலரையனுப்பி விராடனது ஆனிரையைக் கவர்ந்துவரச் செய்வேனேல், பாண்டவர் விராடதேசத்திலிருப்பின் அரசனுக்கு உதவிசெய்ய வருவர்; அப்பொழுது அவரை வெளிப்படுத்தி, பின்னும் பதின்மூன்று வருடம் பாண்டவப்பதர்வாசனையின்றி வாழலாம்” என யோசித்தான். யோசித்தவண்ணமே படையிற் சிலரையனுப்பி விராடனது ஆனிரை கவர்ந்தான். கவர்ந்த ஆனிரையைச் சாதேவன் சென்று மீட்டுவந்தனன். பாண்டவர் விராடநாட்டிலுள்ளாரென்னும் ஐயம் துரியோதனன்மனத்திற் பலத்தது. அவன் விராடநாட்டின்மேற் சதுரங்கசேனையோடு வந்தான். படையெடுத்து வந்தவனைத் துரத்தும்படி விராடன் தன்மகன் உத்தரனை அனுப்பினான். அப்பொழுது கங்கபட்டர், “பிருகன்னளையென்னும் பேடி, இரதசாரத்தியம் செய்வதில் வல்லாள். உத்தரன்தேரை அவள் செலுத்துவளேல், பகைவரை உத்தரன் துரத்துவது திண்ணம். அப்படியே செய்க” என்று ஆலோசனை கூறினார். அதைக்கேட்ட அரசன் பிருகன்னளையை அழைத்து, “தேர்செலுத்த நீ எப்போது கற்றாய்?” என; அவள், “எனக்கு ஒரு காலத்தில் அருச்சுனன் தேர்செலுத்தக் கற்பித்தனன்”

என்றாள். “இப்போது என்மகன் உத்தரனுக்குத் தேர் செலுத்தச் சம்மதிப்பாயோ?” என விராடன்கேட்க, “மகாராசா சித்தம் என் பாக்கியம்” என்றனள் பிருகன்னளை. அவள் தேரோட்ட, உத்தரன் போர்முகத்தை நாடினன். உத்தரன் இதற்குமுன் போர்க்களங் கண்டிலன், போராட்டமும் ஒரு விளையாட்டெனஎண்ணியிருந்தவன், இன்று அணிவகுத்திருந்த படைகளைக் கண்டவுடன் நெஞ்சம் பதற உடலெல்லாம் நடுங்கினன். “பிருகன்னளை, தேரைத் திருப்பி அரமனைக்கோட்டு” என்றான் உத்தரன். “அரசிளங்குமாரா, மனம் பதறாதே; உன்முன்நிற்பது மகாசேனையன்று, சிறுபடை; கணப்பொழுதில் இதனைத் துரத்துவோம், அஞ்சாதே; நான் தேரைத் திருப்புவதில்லை” என்றாள் பிருகன்னளை. இச்சொல் காதில் விழுந்தவுடனே தேரினின்று குதித்து ஓடினான் விராடன் மகன். பிருகன்னளையுங் குதித்து, உத்தரனைப் பிடித்துத் தேர்த்தட்டில் ஒரு தூணோடு கட்டிவிட்டு, கையில் வில்லும் அம்புமெடுத்து, தானே தேரையுமோட்டிக்கொண்டு, “வம்மின், வீரரே, வம்மின்” என்றாள். “பேடியோடு போர்செய்ய எனக்கு வெட்கமில்லையோ?” என்றான் கன்னன். உடனே பிருகன்னளை, தூணியினின்று அம்புகளையெடுத்து வில்லிற் தொடுத்துச் சரமாரி பெய்தாள். சேனையெல்லாம் உடைந்து பின்காட்டி ஓடினது. அப்பொழுது துரியோதனன், “கண்டேன், கண்டேன்; இவன் பேடியல்லன், அருச்சுனன். அருச்சுனனையன்றித் தேருஞ்செலுத்திச் சமர்புரிவார் வேறியாருமிலர். போதும், போதும்; என்னெண்ணம் நிறைவேறினது! பாண்டவர் பின்னும் பதின்மூன்றியாண்டு வனவாசமும் அஞ்ஞாதவாசமுஞ் செய்தல்வேண்டும்” என்றான். உடனே வீடுமர், “பொறு பொறு, உன் சொல் வீண்சொல்; பதின்மூன்றாம் வருடம் முடிந்து நாள் இரண்டு

கழிந்தன. ஒருவருடம் முழுதும் யாருமறியாமற் பாண்டவர் வாழ்ந்தார்" என்றார். உடனே அருச்சுனன் வில்லைத் தேரில் எறிந்துவிட்டு, வீடுமரையுந் துரோணரையுந் தலைவணங்கிக் கைதொழுது நின்றான். வீடுமர், "அருச்சுனா, அஞ்சற்க; மெய்யே வெல்லும், பொய் வெல்லாது" என்று ஆசிகூறினார்.

இஃதிவ்வாறிருக்க, விராடனது அரமனையிற் கங்கபட்டரோடு சதுரங்கமாடிக்கொண்டிருந்த அரசன், "நன்னிமித்தங்கள் காண்கிறேன்; உத்தரன் மாற்றாரைப் புறங்காட்டி வென்று வருவன்" என்றான். கங்கபட்டர், "நிமித்தம் நன்னிமித்தமே, வெல்வி நம்பக்கத்ததே; ஆயினும் வெற்றிக்குக் காரணர் உத்தரரல்லர், பேடியே" என்றனர். அரசன், "யாது சொன்னீர், பட்டரே? என்மகனுக்கு வெற்றியில்லையாம் பேடியொருத்திக்கு வெற்றியாம்! இப்படி எனக்குச்சொல்ல உமது நாத் துணிந்தது என் சோற்றைத் தின்றதினாலன்றோ!" எனச் சீறினான். அருகில்நின்ற பலாயனன், தமையனை இவ்வாறு ஏசிய அரசனைப் புடைக்க மரத்தில் ஒருகொம்பைவெட்டினான். அவனெண்ணத்தை அறிந்த கங்கபட்டர், "மடையா, பச்சைவிறகு சமையலுக்காகுமோ?" எனத் தடுத்தனர். இவ்வாறு நிகழ்கையில், உத்தரன் ஏறிச்சென்ற தேர் மீண்டது. உத்தரனும் பேடியும் இராசசமுகம் வந்தனர். விராடன், "மகனே, சிறுவனாயினும் பெருஞ்சேனையை வென்றுவந்தாய், உன்னைப் பெறுதற்கு என்ன தவஞ்செய்தேனோ?" என்றான். உடனே உத்தரன், "எந்தாய், வென்றவன், யானல்லன், அருச்சுனனே" என்ன; விராடன், "அருச்சுனனை எங்கே கண்டாய், மகனே? அவன் எப்படி இங்குவந்தான்?" என அரசன் உசாவ; உத்தரன், "இவன் பேடியல்லன், இவனே அருச்சுனன்; பேடிவேடம்பூண்டு ஒருவருடம் இங்குகழித்தான்" என்றான். அருச்சுனன், வேந்தர்வேந்தே! கடந்தவருடம்

நீர் என்னைமட்டுமன்று, என் உடன்பிறந்தார் நால்வரையும் திரௌபதியையும் ஆதரித்தீர். அண்ணா உதிட்டிரா, அண்ணா வீமா, தம்பி நகுலா, தம்பி சாதேவா, பாஞ்சாலி! நீவிரெல்லீரும் நும் வேடங்களைக் களைந்து, சுயரூபத்தோடு நும்மைக் காட்டுமின்" என்று, தானுந் தன் வேடத்தைக்களைந்து பார்த்தனாகத் தோற்றினான். ஐவரையுந் திரௌபதியையுங் கண்ட விராடன் "ஐம்பத்தாறு தேசங்களில் என்தேசமன்றோ தவஞ்செய்தது! ஐம்பத்தறுவர் அரசர்களில் யானன்றோ தவஞ்செய்தேன்! சுதேட்டிணாதேவி, உன் இல்வாழ்க்கையே வாழ்க்கை! உத்தரை, அருச்சுனனிடம் ஆடல்பாடல்கற்ற இராசகன்னியர் உன்னையன்றிப் பிறருளரோ?" என்றபின், தருமபுத்திரனை* வணங்கி, தம்பியர் நால்வரையுந் தழுவி, திரௌபதியையுந் தொழுதான்; "நீவிர் பாண்டவரென்றும் பாஞ்சாலியென்றும் அறியாது நானும் என்மனைவியும் என் பிள்ளைகளும் செய்த பிழைகளையெல்லாம் எங்களுக்கு மன்னித்தல்வேண்டும்" என இரங்கினான். உதிட்டிரன், "ஐய, ஓராண்டு எங்களுக்கு அன்னவஸ்திரங்கொடுத்து, யாதொரு குறையும் நேராமல் எங்களை நீவிரெல்லீரும் ஆதரித்தீர். நுமக்கு யாம் செய்யும் கைம்மாறுண்டோ?" என்றான். விராடன், "என் மகள் உத்தரை அருச்சுனனுக்கேயுரியள். அவளை அவனுக்கே விவாகஞ்செய்துகொடுக்க எண்ணினேன்" என்றான். அருச்சுனன், "ஐய, நான் உத்தரையை என்மகள் போலவே எண்ணி அவளுக்கு ஆடல்பாடல் பயிற்றுவித்தேன். என்மகளை நான்மணப்பதெப்படி? உத்தரை என்மகன் அபிமன்னுவுக்கே உரியள்" என்றான். "அப்படியே யாகுக" என்றாள் சுதேட்டிணை.

*தருமபுத்திரன் என்பது உதிட்டிரனுக்குப் பட்டப்பெயர்.

13. கண்ணன் தூது

பன்னிருயாண்டு வனவாசமும் ஓரியாண்டு அஞ்ஞாதவாசமும் முடிந்தபின், பாண்டவர் தம் நண்பர்களை அழைத்து, "இனிச் செய்வதியாது?" எனச் சூழ்ச்சிசெய்தனர். கூடிவந்தவர் எல்லாம், "கூடுமானால் போரில்லாமலே கௌரவரோடு உறவு பாராட்டி, பாண்டவர் தாம் இழந்த நாடுநகரங்களை மீட்டும் பெற்றுக்கொள்ளல்வேண்டும்" எனப் புத்திசொல்லி, "முதலில் கண்ணனைக் கௌரவரிடமனுப்பி, உங்கள் நாடுநகரங்களை உங்களுக்குத் தரல்வேண்டும் என்று கேட்டலே கடமை" என்றார். கண்ணனும் தூதுபோதற்கு இயைந்தனன். வந்தவர் எல்லாம் போனபின், கண்ணன் பாண்டவரையுந் திரௌபதியையும் அழைத்து, "நீங்கள் விரும்பியவாறு துரியோதனனிடந் தூதுசெல்ல இணங்கினேன், நான் போய் யாதுசொல்லல் வேண்டும் கூறுமின்" என்றான்.

உதிட்டிரன், "கண்ணா! நீ துரியோதனனிடம் போய், அவன் கூறியவாறே நாங்கள் பதின்மூன்றுவருஷமும் கழித்துவிட்டோம் எனவும், முன் அவன் எங்களுக்குக் கூறியபடியே எங்கள் இராச்சியத்தை எங்களுக்குத் திருப்பிக்கொடுத்தல் வேண்டும் எனவும் அவனுக்குச்சொல்" என்றான். கண்ணன், "அப்படியே சொல்வேன். என் சொல்லுக்கு அவன் இணங்கானேல்—"

"எங்கள் ஐவேமுக்கும் ஐந்து ஊர் கேள்"

"ஐந்து ஊருந் தாரானேல்—?"

"ஐந்து வீடு கேள்"

"அவையுந் தாரானேல்—?"

"எங்களைப் போரில்எதிர்க்க ஆயத்தனாகும்படி அறிவி."

இவ்வாறு உதிட்டிரன் சொன்னபின், கண்ணன் வீமன் முகத்தைப்பார்த்து, "வீமா! உன் கருத்தென்னை?" என வினவினான்.

வீமன், "இந்த வெட்கங்கெட்ட மனுஷனோடு பிறக்க நான் முன்னே என்னபாவஞ்செய்தேனோ!" என்று; உதிட்டிரன் முகத்தைப்பார்த்து,

"அரவுயர்த்தோன்* கொடுமையினும் முரசுயர்த்தோய்§,
[நின தருளுக் கஞ்சி னேனே.

"இவ்வாறு ஐந்து ஊராயினும் ஐந்து வீடாயினும் இரக்கும்போது துரியோதனன் அவற்றை ஈவனேல், நானும் அருச்சுனனும் திரௌபதியும் வேத்தவையிற் செய்தசபதமெல்லாம் எவ்வாறு போம்? ஆண்மையில்லாதவரன்றோ இரந்துவாழல் வேண்டும்?

'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின், பரந்து
கெடுக உலகியற்றி யான்'

என்பது ஆன்றோர் வாக்கு" என்றான்.

இதன்பின் கண்ணன் பார்த்தனை நோக்கி, "நின் கருத்தென்னை, அருச்சுனா?" என; அவன்,

"'பொன்னொருந் திகிரியினான் போனாலும், பொறைவேந்தன்
புகன்ற வெல்லாம்
சொன்னாலும் அவன்கேளான்; விதிவலியாற் கெடுமதிகண்
தோன்றா தன்றே!
எந்நாளும் உவர்நிலத்தில் நெல்விளைவித் திடினும்விளை
வெய்தி டாது.

*அரவக்கொடியோன் - துரியோதனன்

§முரசக்கொடியோன் - உதிட்டிரன்.

பன்னுகந் தனக்குமிர்தங் கொடுத்தாலும் விடமொழியப்
பயன்கொ டாதே!"

என்றான்.

இதன்பின் நகுலனைக் கண்ணன் கேட்க,

"நாவலம்பூ தலத்தரசர் நாடிரந்தோம் எனஎம்மை
நகையா வண்ணம்
காவலன்றன் படைவலியும் எமதுதடம் புயவலியும்
காண லாமே"

என்றான் நகுலன்.

இதன்பின் கண்ணன் சாதேவனைக் கேட்க, அவன்,

"திருவுளத்துக் கருத்தெதுவோ அதுஎனக்குங்கருத்து"

என்றான்.

கண்ணன் சாதேவனைத் தனியிடம் அழைத்துச்சென்று, "போர்செய்யாமல் நம் எண்ணம் எப்படிக் கைகூடும்?" எனக் கேட்க, சாதேவன், "அண்ணா, நீ நினைப்பின், போர்வாராமற் காக்க உன்னால் முடியும்" என்றான்.

"அஃதெப்படி?"

"பாராளக் கன்னன், இகற் பார்த்தனைமுன் கொன்று,
காரார் குழல்களைந்து, காலிற் தளைபூட்டி [அணங்கின்
நேராகக் கைப்பிடித்து நின்னையும்யான் கட்டுவனேல்,
வாராமற் காக்கலாம் மாபா ரதம்" என்றான்

கண்ணன், சாதேவா! நீ முன்னே சொல்லியவை எல்லாவற்றையும் செய்துமுடிப்பினும், என்னைக்கட்ட வல்லாயோ?" என; சாதேவன், "உன்னைக் கட்டுவதற்கு வேண்டிய அறிவு எனக்கில்லை; உன்னைக்கட்ட எனக்குத் தேகபலமும் இல்லை. ஆயினும், நீ அன்பர்க்கெளியை, அன்பினால் உன்னைக் கட்டுவேன். என் அன்பைமீற வல்லாயோ நீ?" என்று, அவன் பாதத்தில் வீழ்ந்து, இருகரங்களாலும் அவன் அடியிணை

யைப் பற்றிக்கொண்டு, "கண்ணா! பாரதப்போர் நடக்கும். இரண்டுபக்கத்துச் சேனைகளிலும் பல்லாயிரவர் சாவர். எங்கள் ஐவேமையும் சாவாமற் காப்பது உன்கடன்" என வேண்டினான். கண்ணன் மனமுருகி, "சாதேவா! விடு என் காலை, நீ சொல்வது மெய். யுத்தம் வந்தேதீரும்; இரு மருங்கினும் பல்லாயிரவர் இறந்துபடுவர்; நீவிர் ஐவிரும் சாகாமல் வெற்றியடைவீர்; உமக்கு வேண்டுஞ் சகாயம் நான் செய்வேன்; என்னை நம்புக. வா, போவோம் சபைக்கு. ஆயினும் இங்கு நாம் பேசியதொன்றும் பிறரொருவரும் அறியலாகாது" என்று, சாதேவனை அழைத்துக்கொண்டு பாண்டவர்பாற் கண்ணன் மீண்டனன்.

பின் அவன் திரௌபதியை நோக்கி, "ஐவருந் தனித் தனியே தத்தங் கருத்தை எனக்கு அறிவித்தனர்; நின்கருத்தென்னை, தங்காய்?" என்றான். திரௌபதி,

"கற்றைக் குழல்பிடித்து, கண்ணிலான் பெற்றெடுத்தோன்
பற்றித் துகிலுரிய, பாண்டவரும் பார்த்திருந்தார்.

இப்பொழுதும் ஊர்இரந்துவாழ உன்னுகின்றார். 'அகதிக்கு ஆகாசமே துணை'" என; கண்ணன், "பாஞ்சாலி, நீ அஞ்சற்க; உன்னை இறைவன் மறவான். இவர் ஐவரும் மறந்தாலும் அபிமன்னு உன்னை மறவான். உன் சபதத்தை நிறைவேற்ற அவன் இருக்கும்போது நீ அஞ்சுவதேன்? இப்பொழுதே துரியோதனனிடம் போகின்றேன். அங்கு நடப்பதெல்லாம் நான் உனக்கு வந்து சொல்லுவேன்; அழாதே" எனத் தேற்றி, பாண்டவரை விட்டு அத்தினபுரம் நோக்கிப் போனான்.

கண்ணன் அங்கு வருவதைக் கேள்வியுற்ற பலர், அவனை எதிர்கொள்ளச் சென்றனர். அவர்களுள் விதுரர்வீட்டுக்கு விருந்தினனாய்ச்சென்றான் கண்ணன். அங்குநின்று இராச

சபைக்குக் கண்ணன் போயினன். பாண்டவர்தூதனாய் அவன் வருதலைக் கேள்வியுற்ற துரியோதனன், தன் சபையாரை நோக்கி, "இடையர்வீட்டில் வளர்ந்து மாடுமேய்த்தகண்ணன், இன்று பாண்டவருக்குத்தூதனாய் நம்சபைக்கு வருகிறான் எனக் கேள்வி, அவன் இங்கு வருவனேல், நீவிர் எவரும் அவனுக்கு எவ்வகைமரியாதையும் செய்யவேண்டா. எழுந்து நிற்கவும் வேண்டா" என *ஆணையிட்டனன். அதைக் கேட்டவருள் முதியார் ஒருவரும் அதை மதித்திலர். சபைக்குக் கண்ணன் வந்தவுடன் வீடுமர், துரோணர் முதலிய பெரியார் அவனைத் தக்கவாறு உபசரித்தனர். பின் கண்ணன் ஓர் ஆசனத்திருந்து, துரியோதனனை விளித்து இவ்வாறு கூறுவான்: "பாண்டவர் பன்னிருயாண்டு வனவாசமும் ஓரியாண்டு அஞ்ஞாதவாசமும் முடித்து மீண்டனர். முன் நீ சொன்னபடி அவர் நாடுநகரங்களை அவருக்கு மீட்டுங் கொடுத்தல் நின்கடன். இவ்வாறு நீ செய்யத் தவறுவையேல், 'துரியோதனன் சொன்னசொற் தவறினான்' என உலகம் ஏசும். அப்படி உலகம் ஏசஇடங்கொடாது நீயே அவர் நாடுநகரங்களை அவருக்கு மீட்டுங்கொடுப்பதுமன்றி, அவரிடம் மெய்யன்புபாராட்டி ஒழுகுவையேல், பரதவமிசத்திற்பிறந்த பாண்டவரும் கௌரவரும் யாதொரு வேற்றுமையுமின்றி வாழ்வதைக் காணும் உலகம் மகிழும். சுயோதனா, இதற்கு என்னவிடை கூறுகின்றாய்?"

இப்படிக் கண்ணன் உரைத்த இதோபதேசம் துரியோதனன்காதில் நாராசம்போல நுழைந்தது. உடனே அவன்,

"நீவெ றுக்கில்என்? இருந்த மன்னவர்
திகைக்கில் என்? பல நினைக்கில்என்?

* ஆணை — கட்டளை.

போய்ந கைக்கில்என்? உரைத்த உண்மைமொழி
பொய்த்ததென் றமரர் புகலில்என்?
வேய்ம லர்த்தொடை யல்ஐவர் என்னுடன்
மிகைத்து வெஞ்சமர் விளைக்கில்என்?
ஈயி ருக்குமி டம்ள னினும்இப்பு
வியில்யான் அவர்க்கர சினிக்கொடேன்"

எனக் கதறினான். கண்ணன், "சுயோதனா, என் வாயினின்று ஐவர் வெஞ்சமர் விளைப்பர் என்பது வரவில்லை. போர்செய்ய எண்ணுகின்றாய்நீ. சமாதானத்தோடுவாழ எண்ணுகின்றார் ஐவர். அவர் ஆள அவர்நாட்டினைத்தர உனக்கு விருப்பமில்லையேல், 'ஐந்து ஊராயினுந் தருக' என்றார் பாண்டவர்" என்றான். துரியோதனன், "ஐந்து ஊர்அல்ல, ஒரு குக்கிராமமும் தருவதில்லை" என்றான். "ஐந்து ஊர் தாராயேல் ஐந்து இல்லங்களேனுந் தா" என்றான் கண்ணன். "ஒரு குடிலும் நான் அவருக்குக் கொடுப்பதில்லை" என்றான் துரியோதனன்.

இதைக்கேட்ட விதுரர், "இதுகாறும் பழுதில்லாத குருகுலத்துக்கு இன்று வசைவந்ததே! சுயோதனா, பதறாதே; நுந்தையார் அந்தகராகப்பிறந்ததினால், பாண்டுவுக்கே அரசு சென்றது. பாண்டு இறந்தபின் உதிட்டிரனுக்கே அரசு செல்லுதல் நெறி. அப்படியிருந்தும், பாண்டவர் நாடு முழுதுங் கேட்டாரில்லை. அதிற் பாதியையே கேட்டனர்; அதுவுந் தாராயேல் ஐந்து ஊர் கேட்டனர். அவற்றையும் தாராயேல் ஐந்து இல்லம் வேண்டினர். நீயோ ஒரு குடிலும் தருவதில்லை என்கின்றாய்! ஐயோ, இம்மொழி கேட்கவோ யான் இருந்தேன் உலகில்? கண்ணன் விண்ணப்பத்தை மறாதே, ஐந்து வீடாயினுந் தருக" என்றான். இதைக்கேட்ட துரியோதனன், "இதற்குமுன் குருகுலத்துக்கு

வசைவந்தது இல்லையாம்; என்றுதான் இன்று வசைவந்த தாம்! விதுரர் தாசிக்குப்பிறந்தமகன்* என்பது வசையில்லை போலும்! இவ்வூரில் அடியெடுத்துவைத்த இடையனை வேறொருவரும் அழையாதிருக்க நீ உன்வீட்டுக்கு அழைத்துச் சென்று உபசரித்தது, தாசிமகன் புத்தியல்லவோ? இன்று சபையில் யாரும் பேசாது வாளாவிருக்க, தாசிமகனர் என் சொல்லைமீறிப் பேசத்தலைப்பட்டார்!" என்றான்.

இப்புன்சொல் தஞ்செவியில் விழவே, உள்ளஞ்சினக்க, கண்சிவக்க, உடலம்பதற, நாக்குழற, விதுரர், "என்ன சொன்னாய்? மானிடப்பதரே, இச்சொல் சொன்னநாவை உடனே என்வாளாற் துணித்திருப்பேன்! குருகுலத்தில் முதியோன் ஒருவன் சிறுவன் ஒருவனை நாவை வெட்டினான் என்னும் பழிச்சொல்வரும் என்று அஞ்சினேன். நீ சொன்ன சொல் வேறு எவருஞ் சொல்லியிருப்பரேல், அவரை என் வில்லுக்கு இரையாக்கியிருப்பேன். இவ்வில்லை இன்னும் வைத்திருப்பேனேல் ஒருவேளை உன்பொருட்டு உன் மாற்றுரைக்கொல்ல என்மனந் துணியும். ஆகலின் இதை இப்பொழுதே முரித்து எறிகிறேன்" என்று, வில்லை ஒடித்து விட்டு, சபையினின்றுநீங்கி, தம்மனையைநோக்கிச் சென்றனர். அவர் சென்றபின், கண்ணன், 'சுயோதனா, வெஞ்சமர் வேண்டினாய். அதனைப் பாண்டவர் நினக்குத் தருவர்; யுத்தத்துக்கு ஆயத்தஞ்செய்" என்றபின் அவையைவிட்டுப் புறப்பட்டனன்.

கண்ணன் விதுரர்வீட்டுக்குத் திரும்பிவந்து, அங்கு கடந்த பதின்மூன்றுவருடம் உறைந்துவந்த குந்தியைத் தனியே அழைத்துச்சென்று, "மாமீ, நுமக்கு ஓர் இரகசியஞ் சொல்லல்வேண்டும். யான் இதை எப்படி அறிந்தேனென்று

* விதுரர் தாய் அடிமைப்பெண். தாசி — அடியாள்.

என்னைக்கேட்கவேண்டா. நீர் பாண்டுவை மணக்குமுன் நுந்தையார் அரமனையில் இருக்கும்பொழுது ஓர் ஆண்மகவைப் பெற்று, வசைமொழிக்குஅஞ்சி, மகவை ஒரு பேழையில் வைத்து, கங்கையில் இட்டதை மறந்திருக்கமாட்டீர். அதன் பின் அப்பிள்ளையின்கதி யாதாயிற்று என்பது நுமக்குத் தெரியாது. யான்சொல்ல, இன்றுகேளும்: ஆற்றில் மிதந்து வந்த பேழையைத் திரிதராட்டிரன் தேர்ப்பாகன்ஒருவன் எடுத்துத் திறந்து, உயிருடனிருந்த பிள்ளையைக்கண்டு, தன் மனைவி இராதையிடங் கொண்டுபோய்க்கொடுக்க, அவள் அப்பிள்ளையை வளர்த்து வந்தனள். அப்பிள்ளை உரியகாலத்தில் கௌரவருக்குத் தோழனானான். அவனைத் துரியோதனன் அங்கநாட்டுக்கு அரசனாக்கினான். அவனே கன்னன். கன்னன் நும் மகன்; இதை நீர் அறிந்திலீர்; கன்னனுக்கும் தன் தாய்தந்தையர் யாரென்பது தெரியாது. கன்னன் துரியோதனனுக்கு உற்றதோழன். கௌரவருக்கும் பாண்டவருக்கும் போர் சிலநாளிற் தொடங்கும். கன்னன் துரியோதனன் பக்கம் போர்செய்வனேல், அருச்சுனன் சாவது திண்ணம். ஆகவே, நீவிர் இன்றே கன்னன்பாற்சென்று நீவிர் அவனுக்குத் தாயார்என்பதும் அவன் நுமக்கு மைந்தன் என்பதும் அறிவித்து, அவன் கௌரவர்களைவிட்டு ஒழிவனேல் பாண்டவர் வெற்றியடையும்போது அவனுக்கே முடிசூட்டுவது எனத் தெரிவியும். அதற்கு அவன் உடன்படானேல், போரில் அருச்சுனனை எதிர்த்துப் பொருகையில் அருச்சுனன் மீது ஒருமுறைக்குமேல் அம்பு எய்யாதிருக்க ஒருவரம் வேண்டுமின். வெட்கத்துக்குஅஞ்சி, கன்னனுக்கு இதைச் சொல்லீரேல் அருச்சுனன் சாவது ஒருதலை" என்றான்.

குந்தி தான் பெற்ற மக்களுள் அருச்சுனன்மீதே அளவிலா அன்புடையள், பிள்ளைகள் எல்லாருள்ளும் அருச்சுனன் கனிட்டன் என்பதினாற்போலும்.

தன் சேட்டகுமாரன் இன்னும் உயிரோடு இருக்கின்றான் என்றும், அவன் கன்னனே என்றும் கேள்வியுற்ற தாய் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. அம்மகிழ்ச்சியை ஆனந்த சாகரம் எனின் அது மிகையாகாது. ஆயினும் தன் தலைப் புதல்வன் கன்னன், தன் குட்டன் அருச்சுனனுக்குத் திராப் பகைவனென்றும், அவனே இவனைக்கொல்லக் கங்கணங்கட்டி இருக்கிறான் என்றும் நினைக்கும்போது சாகரத்தை வடவாமுகாக்கினி உறிஞ்சியதுபோல ஏங்கினாள் குந்தி. "ஐயையோ! என்போற் பாவியும் உண்டோ? 'தன்வினை தன்னைச்சுடும்' என்றதுபோல என் பிள்ளையை ஆற்றில் எறிந்துவிட்டபாவம் இப்பொழுது என் குடலைத் தின்கின்றதே! அருச்சுனன் என் உயிர். அவன் செத்தால் என் உயிர் நிற்குமோ? அன்றியும் என்மகன் கன்னன் குருநாட்டை ஆள்வதைக் காணும்பாக்கியம் என் கண்ணுக்குக் கிடையாதோ? எப்படியாயினும் ஆகுக. இன்றே கன்னனிடஞ் செல்வேன்" என எண்ணி, மனவேகத்தோடு கன்னனை அடைந்தாள் அவன் தாய்.

கன்னன், தன்னிடம்வந்த குந்தியை ஆசனத்திருத்தி, தக்க மரியாதையோடு உபசரித்து, "நீவிர் என்னிடம்வந்தது யாது கருதியோ?" என வினவினன். அவனுக்குக் குந்தி கூறுவாள்:

"கன்னா கேள், நான் இதுகாறும் யாருக்குஞ்சொல்லாத இரகசியம் ஒன்றுண்டு. அதை இன்று உனக்குச்சொல்ல வந்தேன். இதுவரையிலும் நான் உனக்குஞ்சொல்ல எண்ணவில்லை. இதை நீ அறியாதிருப்பது தகுதியன்று என எண்ணியே இப்பொழுது சொல்லத் துணிந்தேன். ஆயினும் அதைச் சொல்லுமுன் உன்னிடம் ஒரு வாக்குதத்தங் கேட்கிறேன். நான் இன்று உன்னிடம் வந்ததும், இங்கு

நானும் நீயும் செய்யும் சம்பாஷணையும் கௌரவரில் ஒருவரேனும் பாண்டவரில் ஒருவரேனும் அறியலாகாது. இது வெளிப்படுமேல் பெருந்தீங்கு உண்டாகும்."

இவ்வாறு குந்தி கூறக்கேட்ட கன்னன், "இவ்விஷயத்தை எவருக்கும் அறிவியேன். அச்சமின்றிப் பேசுக" என, குந்திசொல்லுவாள்:

"நான் பாண்டுவை விவாகஞ்செய்வதற்குமுன்னே என் தாய்தந்தையர் அரமனையில் கன்னியாய் வாழ்ந்தகாலத்தில், எந்தையைக்காண அயல்நாட்டு இராசகுமாரனொருவன், அழகில் இளஞாயிறுபோல்வான், வந்தனன். அவனும் நானும் ஒரு பூங்காவிற் சந்திக்கநேர்ந்தது. நாங்கள் ஒருவரையொருவர் கண்டதும் எங்களையறியாமலே அன்புவலைக்குட்பட்டோம். உடனே இராசகுமாரன் என்னைக் காந்தருவ விவாகஞ்செய்தனன். அதன்பின், தான் என்னை மணந்ததைத் தன் நாட்டிற்குச் சென்றவுடன் தன் தாய்தந்தையருக்கறிவித்து, என்னை அழைத்துச்செல்வதாக வாக்களித்தான். அந்தோ! இதைக்கூறி அவன் பத்தடியெடுத்துவைக்குமுன் ஒரு நாகம் அவனைத் தீண்டிற்று. உடனே விஷம் தலைக்கேறி என் கண்முன்னரே அவன் விழுந்து செத்தான். நானும் என் தோழிமாரும் அவனை யாருமறியாமல் அடக்கஞ்செய்துவிட்டு வாளாவிருந்தோம். அதன்பின், ஐயிரண்டு திங்கள்* கழிந்து எனக்கு ஓராண்மகவு பிறந்தது. உலக அபவாதத்துக்கு அஞ்சி, அம்மகவை ஒரு பேழையுள்வைத்து, கங்கையாற்றில் விடுத்தேன். அம்மகவே நீ" என்று கண்ணீர் விட்டாள். கன்னன் சிறிதுநேரம் எண்ணத்துள் ஆழ்ந்திருந்து, பின் அவளைநோக்கி, "நீவிர் கூறுவது உண்மை

* நான்கு எழல்கொண்டது ஒரு திங்கள். எழல் — எழு அல்.

யென்பதை யான் எவ்வாறு அறிவேன்?" என்றனன்.
அதற்கு அவள், "ஒருபெண், வசையென உலகம் நினைக்கும் விஷயம் ஒன்றைத் தன்மேற்சுமத்தி மற்றவர்களுக்குத் தானே அதை எடுத்துச்சொல்வாளோ? நான் பாண்டுவை மணப்பதற்குமுன் வேறொருவனை மணந்ததும் அதனாற் பிள்ளை பெற்றதும் என் தாய்தந்தையரும் அறியார். அப்படியிருக்க, ஓர் இராசபத்தினியாகிய யான், எனக்கு வசைதரும் ஒரு கதையைக்கட்டி, அதை ஓர் இராசனுக்கு வந்து சொல்லுவேனோ? என் அகத்தின் உண்மையை என்முகமேகாட்டும். இன்னும் வேறுசான்று கேட்பையேல் இதோ இந்தக் கண்ணாடியுட்பார்* உன்முகத்துக்கும் என்முகத்துக்கும் இருக்கும் ஒற்றுமையை."

இதைக்கேட்ட கன்னன், "அன்னாய், நுஞ்சொல் மெய்யென்பதில் எனக்கு ஐயம் சிறிதுமின்று. இதுவரையிலும் எனக்குத்தெரியாத இவ்வுண்மையை இன்று தெரிவித்தற்குக் காலம்வந்தது என்றீர், அஃது என்னை?" என்றான்.

உடனே குந்தி ஓடிப்போய், மகனை மார்போடு இறுகத் தழுவி, இருகன்னத்திலும் முத்தமிட்டு, "கன்னா, இன்னுஞ் சிலநாளிற் கௌரவருக்கும் பாண்டவருக்கும் போர்தொடங்கும். நீ கௌரவருக்குத் துணைநிற்பையேல், இருதலைக் கொள்ளியினிடையே நின்ற எறும்புபோல என்மனந் துடிக்கும். உன்னை இழப்பேனோ? ஐவரில் ஒருவனையாவது இழப்பேனோ? இழக்க என்மனந் துணியவில்லையே. நீ கௌரவரை விட்டுப் பாண்டவர்பக்கஞ் சேர்வையேல் அவரெல்லாம் உன்னடியிணைக்கீழிருந்து குற்றேவல்செய்ய, நீயே குருநாட்டை

*ஈண்டு கண்ணாடியென்றது உலோகத்தினாற் செய்தது. அதன் மேற்பரப்பு தன்முன் உள்ளவற்றைப் பிரதிவிம்பிக்கும்.

ஆளுவை. இவ்வரம்ஒன்று கேட்கவே உன்னிடம் வந்தேன்" என்றாள்.

"அன்னாய், நன்றுசொன்னீர்! என்னையிழக்க நுமக்கு மனமில்லையோ? பேழையில்வைத்து, கங்கையாற்றில் என்னை விட நும்மனந் துணிந்ததன்றோ? அன்றே என்னை இழந்தீரன்றோ? நான் நீவிர்பெற்ற மகனென்பது மெய்யேயாயினும் இப்பொழுது என் உடலத்துட் பாயுங் குருதியில் ஒவ்வொரு துளியும் சுயோதனனுடையதன்றோ? என்தசையில் ஒவ்வோரங்குலமும் அவனளித்த உணவன்றோ? என்தோலை அறுத்துச் செருப்புத்தைத்துச் சுயோதனனுக்கு நான் கொடுத்தாலும் அது கைம்மாறாகுமோ? 'உண்ட வீட்டுக்கு இரண்டகஞ்செய்தான் கன்னன்' என்ற வசைமொழி எனக்கு வருவது நுமக்கழகோ? இம்மட்டோ? தேர்ப்பாகன்மகன் என்று யாவரும் என்னைப் புறக்கணித்தகாலை என்னை அங்கதேசத்துக்கரசனாக்கி, தன் தம்பியர் எவரினும் என்னை மிக நேசித்தவன் சுயோதனனன்றோ? அம்மா, இக்கதைகேண்மின்: ஒருநாள் சுயோதனனைத்தேடி எங்குங் காணாமல், ஒருவேளை அந்தப்புரத்தில் இருக்கின்றான்போலும் என எண்ணி அங்கு சென்றேன்; அங்கும் அவனில்லை; அவன் மனைவி என்னை விளித்து, 'அண்ணா, சதுரங்கமாடுவோம், வா' என்றாள்; நான் இசைந்து, இருவேமும் சதுரங்கமாடினேம்; வெகு நேரஞ்சென்றபின் ஆட்டத்தில் எனக்கே வெற்றிவருந்தருணத்தில் சுயோதனன் வாயில்வழியே உள்ளேநுழைந்தனன்; வாயிலுக்குப் புறங்காட்டியிருந்தநான் அவன்வந்ததைக் காணவில்லை.; தன் கணவன் வந்ததைக் கண்டவுடனே எழுந்தாள் அவன் மனைவி. ஆட்டத்திற் தோல்வியடையுமுன் எழுந்து ஓடக்கருதினாளென நான் நினைத்து, 'ஏன் எழுகின்றாய்? ஆட்டத்தைமுடித்தபின் போ, இரு' என்று அவள் சேலையின்

முன்றானையைப் பிடித்து இழுத்தேன்; அதிற் கோத்திருந்த மணிகள் பல விழுந்து சிதறின; இதற்குள் சுயோதனன் வந்துவிட்டனன்; அந்தப்புரத்தில் வேறொருவருமில்லாத காலத்தில் அவன் மனைவியோடு சதுரங்கமாடினதுமன்றி, அவள்சேலையின் முன்றானையைப்பற்றியிழுத்த என்னை எவ்வாறு ஒறுப்பானோ என்று நான் அஞ்சினபொழுது, அவன் என்னருகே நின்று, 'கன்னா, சிந்தின மணிகளை நான் பொறுக்கித்தர நீ கோப்பாயோ, நான் கோக்க நீ பொறுக்குவாயோ?' என்று அன்போடு கேட்டான்; இத்தகைய என் நண்பன்பொருட்டு என் உயிரையும் ஈவன்; இத்துணிபினின்று என்னை மாற்ற எவராலுமாகாது, இது சத்தியம்."

"மகனே, தேவசங்கற்பம் இஃதாயின், யானோ இதனை மாற்றுவேன்? உன் எண்ணப்படி செய்க. ஆயினும் ஒன்று வேண்டுவேன்: போரில் நீயும் அருச்சுனனும் எதிர்த்துப் பொருவீரேல், அருச்சுனன்மீது ஒருமுறைக்குமேல் அம்பெய்யற்க. உன்தாய் இதை வேண்டினேன்."

"அங்ஙனமேயாகுக. பார்த்தன்மேல் ஒருமுறைக்குமேல் அம்பெய்யேன். அன்னாய், நானும் நும்மிடம் ஒருவரங் கேட்கின்றேன்: நான் நும்மகன் என்பதைப் பாண்டவர் அறியாதிருத்தல்வேண்டும். போரில் நான் மாள்வது திண்ணம்; போர்க்களத்தில் என்பிணத்தின்மீது விழுந்து நீர் அழல் வேண்டும்; நான் நுமக்கு மகனென்பதும் நீர் எனக்குத் தாயென்பதும் அன்றைக்கு இருபக்கமும் அறிக; அதுகாறும் இவ்விஷயம் யாரும் அறியற்க."

"அங்ஙனமே யாகுக."

இதைச்சொன்னபின் குந்தி எழுந்து, தன்மகனை ஆலிங்கனஞ்செய்து, உச்சிமோந்து, இருகன்னத்திலும் முத்தமிட்டாள். உடனேகன்னன் அவளடியில்வீழ்ந்து, "உய்ந்தேன்,

உய்ந்தேன். இதுகாறும் 'தேர்ப்பாகன் மகன் யான்' என எண்ணியிருந்தேன். இன்று என் தாய்தந்தையர் யாரென்பது அறிந்தேன். என்தாய் என்னைத்தழுவவும் உச்சிமோப்பவும் முத்தமிடவும் பாக்கியம்பெற்றேன். இன்று இதுபோதும். நான் யார்மகன் என்பதை நான்செத்தபின் உலகம் அறியும்" என அரற்றினான். 'கன்றைப்பிரியுந் தலையீற்றாவைப்போல' அரிதிற் பிரிந்தாள் குந்தி கன்னனை.

பின் மீண்டுவந்து, தனக்கும் கன்னனுக்கும் நடந்த சம்பாஷணை முழுதும் குந்தி கண்ணனுக்குச் சொன்னாள். "நன்றுசெய்தனை" எனக் கண்ணன் அவளை வியந்தனன்.

அதன்பின் தான் வந்தகாரியம் முடிந்தது என உவகையோடு பாண்டவர்பாற் சென்றான் கண்ணன்.

14. போர்

கண்ணன், தான் துரியோதனனிடஞ் சென்றதும், அவன் சபையில் நிகழ்ந்ததும், பாண்டவருக்கு அவர்கேட்டதொன்றுந் தருவதில்லையென அவன் மறுத்ததும், தான் அவனைப் போருக்கு ஆயத்தனாகுக என்றதும், திரும்பிவந்ததும் பாண்டவருக்குச் சொன்னான்.

இதன்பின் கௌரவரும் பாண்டவரும் போருக்கு ஆயத்தஞ்செய்தார்கள்.

பரதகண்டத்தில் ஐம்பத்தாறுதேசங்களின் அரசரிற் பெரும்பான்மையோர் இரண்டுபக்கத்தில் ஒருபக்கம் உதவி செய்யச் சேர்ந்தனர். பலராமன், தான் ஒருபக்கத்திலுஞ் சேர்வதில்லை என்று, தீர்த்தயாத்திரைசெய்யப் புறப்பட்டான். கண்ணன், "நான் படை கையிற்தாங்கித் துரியோதனன் சேனையைத் தாக்குவதில்லை; ஆயினும் பாண்டவர்பக்கஞ் சேர்ந்து அருச்சுனனுக்குத் தேர்செலுத்துவேன்" எனத் துணிந்தான். அதனாற் கண்ணனுக்குப் பார்த்தசாரதி எனும் பெயர் வந்தது. பாஞ்சாலனும் விராடனும் பாண்டவர்பக்கஞ் சேர்ந்தனர். சிந்துதேசத்தரசன் சயத்திரதனும் மத்திரபூபதி சல்லியனும் கௌரவர்பக்கஞ் சேர்ந்தனர். வீடுமர், துரோணர், கிருபர், அசுவத்தாமன் என்பார் பாண்டவர்பால் மிக நேயம் பூண்டவரேனும், திரிதராட்டிரன் அன்னத்தைத் தின்றவராகையால் கௌரவர்பக்கமே சாரல்வேண்டும் என்னுங் கொள்கையால், துரியோதனனையே சேர்ந்தனர்.* போர் செய்ய மனமில்லாது விதுரர் வில்லை முறித்தெறிந்ததை முன்னமே கண்டோம்.

* ஈண்டு ஒருவிஷயங் கவனிக்கத்தக்கது: வீடுமர் ஆதியோர் வயதில் மூத்தோர்; அறிவில் முதிர்ந்தோர்; அறநூல் அறக்கற்றவர்;

போர் குருக்ஷேத்திரத்திற் பதினெட்டுநாள் நடந்தது. பாண்டவர் தம் சேனைக்குத் திட்டத்துய்மனை அதிபதியாக்கினர். கௌரவர் தம் சேனைக்கு வீடுமரை அதிபதியாக்கினர். வீடுமர் பதின்மதுநாட்போரில் அருச்சுனனை எதிர்த்து அவன்மீதும் கண்ணன்மீதும் சரமாரிபொழியவே, கண்ணன் தன்கையிற் படையெடுப்பதில்லை என்ற சொல்லை மறந்து சக்கராயுதத்தை எடுத்து வீடுமர்மீது எறியப்புக, பார்த்தன் அவனைத்தடுத்து, "கண்ணா, யாதுசெய்யப்புகுந்தாய்? உன் சக்கரத்தை எறிந்து வீடுமரை விழுத்துவையேல் 'கண்ணன் பொய்யன், சொன்னசொற் தவறினான்' எனும் வசைக்கு ஆளாவாய் அன்றோ? வீடுமரை யான் விழுத்துவேன், நீ தேரோட்டுக" என்றான். கண்ணன் சிறிது சினம்ஆறி, "நன்று, நீ சொன்னபடி யான் செய்வேன், நீ வீடுமர்மேற் சரமாரிபொழி" என்றான். பார்த்தன் விடுத்த கணைகள் வீடுமர் உடலையெல்லாந் தைக்க, ஆற்றாது தேரினின்றும் வீழ்ந்தனர் வீடுமர். அருச்சுனன் வீடுமர்பால் மிக அன்புடையன். அவர் தேரினின்று தரையில் வீழ்ந்தவுடனே, "அந்தோ! என் மூதாதையைக் கொல்லும் பழிக்கு ஆளானேனே" என இரங்கி, தன் தேரினின்றுகுதித்து, விழுந்துகிடந்த வீடுமரைத் தூக்கி, அவர் தலையைத் தன்மடியிற் கிடத்தி, "மூதாதாய், சிறியேன் செய்தபிழையைப் பொறுத்தருள்க" என வேண்டினன். அவர் கண்திறந்து அவனைப் பார்த்து, "அருச்சுனா, கவலேல். நீ பிழைசெய்திலை; நின்

திரிதராட்டிரனுக்கும் மக்களுக்கும் இடித்துரைத்துப் புத்திசொன்னவர். சத்தியமுந்தருமமும் பாண்டவர்பக்கம் நின்றனவென்பதை அறிந்திருந்தும் இவர் தருமத்தின்பக்கஞ் சேராமல் அதர்மத்தின்பக்கத்திற்சேரச் செய்தது திரிதராட்டிரன் வீட்டுச்சோறு. இச் சோற்றுநியாயத்தை இன்றும் இந்ததேசத்திலும் இலங்கையிலும் காணலாம்.

வீரத்தை மெச்சினேன், பிழைசெய்தவன் யான்—. என் உடம்பினின்று இரத்தங் காலுவதால் விடாயுற்றேன், நான் பருகச் சிறிது நீர்கொணர்ந்து தாராயோ?" என, அருச்சுனன் உடனே சென்று ஒரு பாத்திரத்திற் தண்ணீர் கொணர்ந்து அவருக்குப் பருக்கினான். அதன்பின் கௌரவர் வந்து அவரைப் பாசறைக்குக் கொண்டேகினர். இதனோடு பதின்மதுநாட்போர் முடிந்தது.

அதன்பின் கௌரவர்சேனைக்குத் துரோணாசாரியரை அதிபதியாக்கினர். பதின்மூவதுநாட்போரில் அருச்சுனன் மகன் அபிமன்னு, சிங்கக்குருளையனையான், கொன்றைமாலை கழுத்திலணிந்து போர்க்களம்புகுந்து, மிக்க உக்கிரத்தோடு பொருதான். அவன் ஆண்மையைக் கண்டவரில் இருதிறத்தினரும் அவனைப் பலவாறு புகழ்ந்தனர். "'விதையொன்று போடச் சுரையொன்று முளைக்குமோ?' இவன் அருச்சுனன் மகன் அல்லனோ?" என வியந்தார் துரோணர். ஆயினும் துரியோதனனும் சயத்திரதனும் கோபாவேசங்கொண்டு, "பிஞ்சிற்பழுத்தவனை விடலாகாது" எனச் சீறினர். துரியோதனன் அபிமன்னுவின் தேர்ப்பாகனையுங் குதிரைகளையுங் கொன்றதுமன்றி, தேர்க்காலையும் பின்னப்படுத்தினன். உடனே அபிமன்னு தேரினின்று குதித்து, "நம்மில் வீரனொருவனுளனேல் வருக, தரைமேல்நின்று போர்புரிவோம்" என்றான். இவன் இவ்வாறு சொல்லுமுன் சயத்திரதன் யுத்ததருமத்தைமீறி வஞ்சனைசெய்து வீரகேசரியை வெட்டி வீழ்த்தினான். அபிமன்னு இறந்துபட்டான் என்றதைக் கேட்ட இருசேனையிலும் இரங்காதவர் சிலரே. கன்னன் இதைக்கேட்டபோது இரங்கினதை வில்லிபுத்தூரார் பின்வருமாறு வருணிக்கின்றார்:

"தாரரசன் மகன், துச்சா தனன்மகன், சல்
லியன்மகன், வேற் சகுனி யென்னும்
பேரரசன் மகன்முதலாம் எத்தனைபேர்
பட்டாலும் பெரிய தன்றே;
பாரரசா னதற்கிருந்த பார்த்தன்மா
மகன்ஒருத்தன் பட்டா னாகில்
ஆரரசுக் கினிஉரியார்? அந்தோ!" என்
றுரைத்தான்மற் றங்கர் கோமான்.

இதனையறிந்த அருச்சுனன் புத்திரசோகந் தாங்கவியலாது தீயில்விழுந்து தற்கொலைசெய்யத் துணிந்தனன். அங்கு நின்ற பெரியோர் அவனைத்தடுத்து, "அருச்சுனா, என்ன செய்யத் துணிந்தாய்? இதுவோ வீரம்? உன் மைந்தனை வஞ்சனையாற் கொன்ற மக்கட்பதடியைக் கொன்று பழி தீராமல், நீ தற்கொலைசெய்யப்புகுந்தது மடமை, மடமை" என்றனர். உடனே அருச்சுனன், "யான் இன்று தீயில் விழேன். என் மகனைக்கொன்ற பாதகனை நாளைப் பொழுது படுமுன் கொல்வேன். கொல்லத் தவறுவேனேல், நான் தீயில் விழுந்து மாள்வேன். இவ்விரண்டிலொன்று நாளை நடக்கும்" என வஞ்சினம் பூண்டான்.

பதினால்வதுநாட்போரில் அருச்சுனன், 'குட்டியைப் பறிகொடுத்த கரடிபோல' வேறொருவரோடும் பொரா எண்ணாமல் சயத்திரதனையே தேடித்திரிந்தான். இவன் எண்ணத்தையறிந்த துரியோதனன் சயத்திரதனைக் காக்கும்படி நான்மருங்கினும் படைவீரர்சூழ நிறுத்தினான். பகல்முழுதுந் தேடியும் அருச்சுனன் சயத்திரதனைக் கண்டிலன். "இன்று நான் சயத்திரதனைக் கொல்லவில்லை யான் சாவதே துணிபு" என்று வன்சூள்உரைத்த அருச்சுனனுக்குக் கண்ணன், "இதோ, அங்குநிற்கின்றான் சயத்திரதன்; இப்பொழுது,

பொழுது பனைப்பொழுது, கொல் அவனை" என்று பணிக்க; அருச்சுனன், "இறுவரை காணிற் கிழக்காந் தலை" என்றபடியே கீழே விழுத்தினான் சயத்திரதன் தலையை. உடனே பாண்டவர் சேனை ஆர்த்தது. உதிட்டிரன், "கண்ணா, உன்னால் இன்று உய்ந்தோம்! பார்த்தனையிழந்து நாங்கள் வாழ்வேமோ?" என மகிழ்ந்துரைத்தான்.

பதினைவதுநாளில் திட்டத்துய்மன் துரோணர் இருக்குமிடம்நாடி அவரைக் கொல்வான் பொருதனன். துரோணர் வயதில் மூத்தாரேனும் ஆண்மையில் மூத்தாரல்லர். கிழச் சிங்கமாயினும் சிங்கம் சிங்கமன்றோ? அவரை வெல்வது திட்டத்துய்மனுக்கு அரிதாயிற்று. அவன் கைசோர்கின்ற காலை, அலியொருவன் துரோணரோடு போர்செய்ய வந்தான். அவனைக் கண்டவுடன் துரோணர், "அலியோடு பொருதல் எனக்கு வீரமன்று" என்று வில்லைக் கீழே எறிந்தார். அப்பொழுதே திட்டத்துய்மன் ஓர் அம்பெய்ய, துரோணர் வீழ்ந்து இறந்தார். "நிராயுதபாணியைக் கொன்றது திட்டத்துய்மனுக்குஅழகோ?" எனின், துரோணர் ஆயுதத்தை எறிந்தபின் திட்டத்துய்மன் அம்பு தொடுக்கவில்லை, தொடுத்த அம்பு இலக்கில் விழுமுன் துரோணர் ஆயுதத்தை எறிந்து விட்டனர் என்க.

பதினாறுவதுநாள் துரியோதனன் கன்னனைச் சேனாபதியாகும்படி வேண்டினன். கன்னன், "சல்லியன் எனக்குத் தேர்செலுத்துவனேல் யான் சேனாபதியாவதற்குத் தடையில்லை" என்றான். துரியோதனன் சல்லியனிடஞ்சென்று, "மத்திரபூபதி, நின்னை ஒருவரம் வேண்டுகின்றேன், எனக்கு அதை அருளுதியோ?" என்றான். "வணங்காமுடிமன்ன, நீ கேட்கும்வரம் யாது?" என்றான் சல்லியன். அதற்குத் துரியோதனன், "கன்னன் என்படைக்குத் தலைவனாக அவனை

வேண்டினேன். நீ தனக்குத் தேரூரின் தான் சேனாபதியாகச் சம்மதிப்பானாம்" எனப் புகன்றான். மத்திரன், "நின்னையன்றி வேறெவரேனும் இப்படி என்முன்வந்து வாய்கூசாது சொல்லியிருப்பரேல், அவர்நாவைத் தறித்திருப்பேன். மன்னர்மன்னா, யான் ஒரு முடியுடைவேந்தனுக்குப்பிறந்த முடியுடைவேந்தன்; யானோ தேர்ப்பாகன் மகனுக்குத் தேர் செலுத்துபவன்? இதனைவிட்டு வேறெதையேனுங் கேள்" என்றான். துரியோதனன்,"மன்னர்திலகமே, நின் பிறப்பையும் நின்பெருமையையும் யான் கணப்பொழுதேனும் மறந்தேனல்லேன்; நீ என்பக்கஞ்சேர்ந்து போர்புரியவந்தது முற்பிறப்பில் யான்செய்த புண்ணியமேயென நினைத்தேன். கன்னனுக்குத் தேர்செலுத்தும்படி உன்னை யான் கேட்டதனால் நீ கன்னனிற் தாழ்ந்தாய் என நினைத்திலேன். 'பார்த்தனுக்குக் கண்ணன் தேர்செலுத்துவதைக் கண்டாயல்லையோ? கண்ணன் பார்த்தனுக்குத் தாழ்ந்தவனோ? பாண்டவர்மீதுள்ள அன்பாற் சாரதியாகச் சம்மதித்தான் கண்ணன். நீ என்மீதன்புள்ளாய்; அவ்வன்பைமுன்னிட்டு இவ்விண்ணப்பஞ் செய்தேன். எப்படியாயினும் நீ கன்னனுக்குச் சாரதியாதல் வேண்டும்" எனக் கைகுவித்து நின்றான். "மன்னர்மன்ன, நீ என்னைக் கும்பிடலாமோ? உன்சொல்லைக்கடக்க இயலாமல் இன்று கன்னனுக்குச் சாரதியாகச் சம்மதித்தேன்" என்றான் சல்லியன்.

இரண்டுநாள் கன்னன் படைத்தலைவனாய்ப் போரை நடத்தினான். பதினெழுவதுநாட் பிற்பகல் பார்த்தன் கன்னனைப் பொருமாறு எதிர்வந்தான். எதிர்நின்ற அருச்சுனனைக் கன்னன் கண்டபோது, "இவன் எம்பி, யாயாருக்கு ஆருயிர்; இவனைக் காக்கும்பொருட்டன்றோ அவர் என்னிடம் வந்தது" என்னும் எண்ணம் அவன் நெஞ்சைக் கலக்

கியது. "என்னை இதுகாறும் ஆதரித்தவன் துரியோதனன்; இன்றைக்கு எனக்குள்ள புகழெல்லாம் அவனால் வந்தது, அவனுக்குத் துரோகஞ்செய்வேனோ? செய்யேன், அவன்மேலுள்ள அன்பினால் என் தம்பியைக்கொல்ல அம்பெடுத்தேன்; ஆயினும் இக்கணை அருச்சுனனைக் கொல்லத்தவறின் இனி வேறம்பு எடேன்" எனநினைத்து, அம்பை வில்லிற்றொடுத்து எய்யப்புகும்போது, கன்னனது கையிரண்டும் நடுங்கின; கன்னன் எய்த அம்பு இலக்குத்தவறிக் கீழே வீழ்ந்தது. அருச்சுனன் கன்னன்கையால் மாளாது தப்பினன். கன்னன் தன்தமையனென்று அருச்சுனன் அறியான். சத்துருவைக் கொல்ல அருச்சுனன் ஒருநாளும் பின்வாங்கினவனல்லன்; இன்று கன்னன்மார்பைத்தைக்க எய்தான் ஓரம்பு. அஃது அவன் நெஞ்சைத்துளைக்க, தேரினின்றும் விழுந்திறந்தான் கன்னன். 'கன்னன் இறந்தான்' என்றதைக்கேட்ட குந்தி, போர்க்களத்துட்புகுந்து, செத்துக்கிடந்த தன்மகன் தலையை மடியில்வைத்து,

"என்றேஎன் தாதையுழைக் கன்னி மாடத்
திரவியனான் திருவருளால் ஈன்றேன், ஈன்ற
அன்றேபொற் பெட்டகத்தில் கங்கை யாற்றில்
ஆமுறையால் உனைவிடுத்தேன் அருளி லாதேன்;
வென்றேமண் கவர்தருமன் மதலைக் காவி
மித்திரனா னதுகேட்டுன் வீரங் கேட்டு
நன்றேஎன் தவப்பயன்என் றுன்னி வாழ்ந்தேன்;
நாகமும்நீ அரசாள நடக்கின் றாயோ?

" ....
பாரஞ்சும் ஒருகுடைக்கீழ் நீயே யாளும்
பதம்அடைந்தும் விதிவலியாற் பயன்பெ றாமல்,

காரஞ்சு கரதலத்தாய், அந்தோ! அந்தோ!
கடவுளர்தம் மாயையினாற் கழிவுற் றாயே!"

என 'தலையீற்றுக் கன்றையிழந்த கபிலைபோல'த் தேம்பித் தேம்பி யழுதாள்.

இதனைப் பாண்டவர்கண்டு அதிசயித்து, கண்ணனைக் கூவி, "இஃதென்னைபுதுமை?" என உசாவ; அவன், "கன்னன் நுந்தாயாருக்குச் சேட்டகுமாரன், நும் எல்லீருக்கும் அண்ணன்; இதுதான் குந்திதேவி போர்க்களம் புகுந்து அழுவதற்குக் காரணம்" என்றான். இதனைக்கேட்ட உதிட்டிரனும் வீமனும் செயலற்று மரம்போல் நின்றனர். தானே தன் அம்பால் தன் தமையனைக்கொன்றதை யறிந்த அருச்சுனன் துயர்க்கடலிலாழ்ந்து,

"ஊற்றிருந்த விழியினளாய் உனைப்பயந்தாள் மனமறுக,
[உயிராய் நின்ற
காற்றிருந்த இடந்தேடிக் கணைபலவும் உடல்குளிப்ப,
[கன்னா, இன்று
கூற்றிருந்த பதிதேடி, குடியிருக்க நடந்தனையோ?
[கொற்ற வேந்தாய்,
வீற்றிருந்திங் கைவேழும் அடிவருடப் புவியாள
[விதியி லாதாய்!

"ஊன்தொடுத்த வயவாளி எத்தனையா யிரந்தொடுத்தேன்?
[ஒப்பி லாய்நீ
தான்தொடுத்த கடுங்கணைக்குத் தப்பினேனெனமகிழ்ந்தேன்!
[சஞ்சரீகம்
தேன்தொடுத்த மலர்நாதன் தனையொப்பான் சேயே,நின்
[திருமார் பத்தில்

யான்தொடுத்த் நெடும்பகழி எனைக்கெடுப்ப தறிந்திலேன்,
[என்செய் தேனே!"

எனப் புலம்பினன். கண்ணன் அவனைத்தேற்றியும் அவன் சிறிதுந் தேறிலன்.

துரியோதனன் கன்னன்உடலையடுத்துநின்று,

"அணியார்தம் படைக்கடலின் அருநிலைக்குக் கரையேற
[லான கோலப்
புணையாய்,எத் திறங்களினும் பகிராமல் உற்றதெலாம்
[புகலத் தக்க
துணையாய்,என் னுயிர்க்குயிராந் தோழனுமா கியஉன்னைத்
[தோற்றே னாகில்,
இணையாரும் இலாவரசே, யாரைக்கொண் டரசாள
[இருக்கின் றேனே!"

என அலமந்தான்.

கன்னன் பல சுகுணங்கள் நிறைந்தவன். இப்பல சுகுணங்களுள் கொடை அவனது விசேஷகுணம். இதனால், "கொடைக்குக் கன்னன்" என்னும் பழமொழிவந்தது. "இருகரத்துவள்ளல்" என்பதும் கன்னனுக்குப் பெயர். இத்துணைச் சுகுணங்களெல்லாம் வாய்ந்தவன் துரியோதனன் தனக்குச்செய்த நன்றியை மறவாது, துரியோதனனது பிழைகளைக் காணுஞ் சத்தியையிழந்தான். "அன்புக்குக் கண்ணில்லை" என்பது ஓர் ஆங்கில முதுமொழி.

பதினெண்மதுநாட்காலையில் துரியோதனன் சல்லியனைப் படைத்தலைவனாக்கினான். அவன் அன்றுகாலை மகாபராக்கிரமத்தோடு பொருது, பாண்டவர்சேனையிற் பலநூற்றுவரை வீழ்த்தினான். அதன்பின் வீமனுக்கும் சல்லியனுக்கும் கடும்போர் விளைந்தது. இதில் ஒருவரையொருவர் வெல்லல் அரிதாயிற்று. இதனைக்கண்ட உதிட்டிரன், "வீமா, விடு ; சல்லியனோடு நான் பொருவேன், நான் அவனைக் கொல்வேன், அன்றேல் அவனாற் கொலையுண்பேன். இரட்டையரே, நீவிர் இருவீரும் என் தேர்க்கால்களைக் காமின்" என்று, சல்லியனோடு சமர்செய்யத்தொடங்கி, நெடுநேரம் இருவரும் பொருதபின் உதிட்டிரன் சல்லியனைக்கொன்று வீழ்த்தினான். அப்பொழுது பகல் பதினைந்துநாழிகைகடந்தது. உடனே கௌரவர்சேனைக்கு அசுவத்தாமன் தலைவனானான். அன்று நடந்தபோரில் வீமன்கையால் துச்சாதனன் மாண்டான். இரத்தவெறிகொண்ட வீமன் துரியோதனனைத் தேடியலைந்தான். துரியோதனனோ வீமனை எதிர்த்தற்கஞ்சி ஒரு குளத்தில் முழுகி, அருகேநின்ற மண்டபமொன்றுட் கரந்துநின்றான். வீமன் பலவிடங்களிற்தேடி அவனைக் காணாது, ஈற்றில் மண்டபத்தில் அவன் மறைந்துநிற்பதைக்கண்டு, "துரியோதனா, போரேறே, வீமனோடு பொர அஞ்சினையோ? வெட்கங்கெட்டவனே, வா வெளியே ; துச்சாதனனைக்கொன்ற யான் உன்னையுங்கொன்றபின்தான் என் சினம் ஆறும்" என அறைகூவினான். துரியோதனன் மண்டபத்தினின்று வெளியேவந்து கதையெடுத்து வீமனை எதிர்த்தான். துரியோதனன் உடல்வலியுடையன், ஆயுதப்பயிற்சியில் மிகத் தேர்ந்தவன், எவ்வகையிலும் வீமனுக்கிணையானவன். வீமனுக்குந் துரியோதனனுக்கும் நடந்தகதைப்போருக்கு உவமை சொல்லப்புகின், வீமனுக்குந் துரியோதனனுக்கும் நடந்த கதைப்போரையே சொல்லல்வேண்டும். இரணசூரர் இருவரும் ஒருவனையொருவன் வெல்லாது பலகன்னல் மலைந்தனர். மலைகையில் வீமன்தலையை மோதும்படி துரியோதனன் தரைக்குமேல் இரண்டடி எழுந்தகணமே, வீமன் மோதினகதை துரியோதனன் தொடையிற்பட்டது. உடனே கீழேவிழுந்தான் துரியோதனன். விழுந்தவனை நெஞ்சில்

மிதித்து, அவனுடலைக் காலாற் புரட்டிப்புரட்டியுதைத்தான்
வீமன். துரியோதனனை அரைக்குக்கீழேயடித்ததும் விழுந்து
கிடந்த வீரனை வெட்கமின்றி வீமன் உதைத்ததும், தீர்த்த
யாத்திரையினின்று அப்போதுதான் மீண்டுவரும் பலராமன்
கண்டு, கோபாவேசங்கொண்டு, துரியோதனன்கையிலிருந்து
வீழ்ந்துகிடந்த தண்டைத் தன்கையிலெடுத்து, "வெட்கங்
கெட்ட வீமா, இப்படிப் பொரவோ துரோணர் உனக்குக் கற்
பித்தார்? ஒருவனை அரைக்குக்கீழே அடிக்க யாரிடங் கற்றாய்?
உன்னை யான் விடுவேனல்லேன், வா என்னோடு கதாயுத்தஞ்
செய்ய" என அழைத்தான். கண்ணன் உடனே அவனைத்
தடுத்து, "அண்ணா, 'ஒருவர்பக்கமும் பொருவதில்லை' என்
றன்றோ தீர்த்தயாத்திரை செய்யப்போயினை? பல புண்ணிய
நதிகளிற்தீர்த்தமாடிவந்த நீ போராடப்புகுதல் தக்கதன்று;
விடுக, சினந்தணிக" என்றான். "இம்மக்கட்பதடி வணங்கா
முடிமன்னனைப் போர்நெறியைமீறி அவமானஞ்செய்யக்
கண்டும் வாளாவிருப்பதோ தகுதி? வீமனை இன்றே கொல்
வேன்" என்றான் பலராமன். "அண்ணா, வீமன் சுயோத
னனைத் தொடையில் அடிக்க எண்ணவில்லை. சுயோதனன்
மேலேஎழுந்ததால் வீமன்கதை சுயோதனன் தொடையிற்பட்
டது. அன்றியும் இவ்விருவருள் நல்லன்யார், தீயன் யார்?
உலகில் முற்றும் நல்லாருமில்லை, முற்றுந் தீயாருமில்லை;
நன்மைதீமையிரண்டுங் கலந்து நிற்பதையே யாரிடத்துங்
காணலாம். இதனாலன்றோ,

'குணம்நாடி, குற்றமும் நாடி, அவற்றுள்
மிகைநாடி, மிக்க கொளல்'

என்றார் ஆன்றோர்?"

இவ்வாறு கண்ணன் பலராமனோடு உரையாடிக்கொண்
டிருக்கையில் அசுவத்தாமன் ஓடிவந்து, "வீம, துரியோதனன்

மாண்டதினால் உங்கள்பக்கத்துக்கு வெற்றியென்று நினைத்
தாயோ? அசுவத்தாமனை வென்றபின்னன்றோ நமக்கு
வெற்றி? எடுகதையை" என்று வீமனை எதிர்த்தான். வீமன்
சிறிதுநேரம் அசுவத்தாமனோடு போர்புரிந்து அவன்சிர
மிசைத் தண்டுகொண்டு மோதினான். அசுவத்தாமன் சிரமீ
துள்ள சூடாமணியை வீமன் கதையால்மோத அது தரையில்
வீழ்ந்தது. வீழ்ந்தமணியை வீமன் எடுத்து அசுவத்தாமன்
கையிற்கொடுத்து, "தாமா, உன்னைக்கொல்ல எனக்கு மன
மில்லை; நீ என் ஆசானமகன்; உனக்கும் எனக்கும் பகை
யில்லை, போ" என்றனன். சிரோரத்தினம் வீழ்ந்ததைத்
தான் வீழ்ந்ததாக ஏற்றுக்கொண்டு, வீமனைத்தழுவி, அசுவத்
தாமன் அகன்றான்.

"துரியோதனன் மாண்டான். இதனோடு யுத்தத்தை
நிறுத்துவோம். இருபக்கத்துச் சேனைக்கும் இதனையறிவி.
போர் முடிந்ததென்றும், உதிட்டிரனையே குருநாட்டுக்கெல்
லாம் அரசனாக்கி முடிசூட்டல்வேண்டுமென்றும், திரிதராட்
டிரனுக்குச் சொல்லியனுப்பு" எனக் கண்ணன் பலராம
னுக்குச் சொல்ல, அவன் அங்ஙனமே செய்தனன்.

ஏற்ற சுபதினத்தில் சுபமுகூர்த்தத்தில் உதிட்டிரனுக்கும்
பாஞ்சாலிக்கும் முடிசூட்டினர். உதிட்டிரன், அறந்தழைக்க,
அருள்பெருக, எவருங்களிக்க, பல்லாண்டு அத்தினபுரத்தில்
அரியணைமீதிருந்து செங்கோல் செலுத்தினான்.

முற்றிற்று

பிற்கட்டு

இயற்பெயர்த்தொகுதி

வீடுமனுக்கு மறுபெயர் — தெய்வவிரதன், பிரமசாரி, காங்கேயன் (= கங்கைமகன்.)

உதிட்டிரனுக்கு மறுபெயர் — தருமபுத்திரன், தருமன், பொறைவேந்தன், முரசக்கொடியோன், மெய்ம்மைவிரதி.

வீமன்—சிங்கக்கொடியோன், வாயுமைந்தன், மாருதி, கதாயுதன், வீமசேனன்.

அருச்சுனன்—பற்குனன், தனஞ்சயன், காண்டீவன், விசயன், பார்த்தன், கிரீடி, சுவேதவாகனன், அனுமக்கொடியோன்.

துரியோதனன் — சுயோதனன், நந்தியாவர்த்தத்தாமன், அரவக்கொடியோன், வணங்காமுடி.

கன்னன் — கச்சைக்கொடியோன், கவசகுண்டலன், அங்கர்கோன், கானீனன்.

கண்ணன் — வாசுதேவன், தேவகிமைந்தன், மாயன், (=கறுப்பன்), நந்தன்சேய், கேசவன், பஞ்சவர்தூதன், பார்த்தசாரதி, தாமோதரன், யாதவன்.

குந்தி — பிரதை, யாதவி.

திரௌபதி — பாஞ்சாலி.

பின்னுரை

நூல் மூவகைய : முதனூல், வழிநூல், சார்புநூல்.

முன் ஒருவருங்கூறாத பொருளை நல்லிசைப்புலவனொருவன் தன் புலமைக்கும் பாவனாசத்திக்கும் ஏற்ப விஷயங்களை ஆராய்ந்து முறைப்படி எழுதுவது முதனூலாகும். அப்படியின்றி முன்னேசிலர் எழுதிய பொருளையும் தானே ஒருவன் ஆராய்ந்து முன்எழுதிய நூல்களின்வழியே செல்லாமல் தன் ஆராய்ச்சிக்குத்தக்கபடி எழுதுவதும் முதனூலாம். இனி,

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூல் ஆகும்"

எனத் தொல்காப்பியனார் கூறினாராலோ எனின், அவர்கூறிய முதனூல் கடவுள்வழிபாட்டிற்கும் பத்திநெறிக்கும் ஆதாரமான முதனூல். ஈண்டு நாம் கவனிக்கும் முதனூல் முன்னைய இரண்டனுள் ஒன்றன்பாற்படும். "வால்மீகிராமாயணம்", "வியாசர்பாரதம்" என்பவை முதனூலுக்கு உதாரணம்.

முதனூலைப் பெரும்பான்மைதழுவி, சிறுபான்மை அதற்குமாறுபட்டுவருவது வழிநூலாம். "கம்பராமாயணம்", "வில்லிபுத்தூரார்பாரதம்" வழிநூலுக்கு உதாரணம். கம்பராமாயணம் ஒன்றையே கற்றவர், அது முதனூலாகிய வால்மீகிராமாயணத்தை எத்துணை ஒத்து அதினின்று எத்துணை வேறுபட்டு உள்ளது என்பதை அறியார். அதுபோலவே, வில்லிபுத்தூரார்பாரதத்தைமட்டும் வாசித்தவருக்கு, அது வியாசர்பாரதத்தை எத்துணை ஒத்து அதினின்று எத்துணை வேறுபட்டுஉள்ளது என்பது தெரியாது. தமிழ் ஆசிரியர் கம்பரும் வில்லிபுத்தூராரும் முதனூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கவில்லை. கம்பருக்கு வடமொழிப்பயிற்சி உண்டோ

என்பதும் நாம் அறியேம். வடமொழிநூலைக் கற்றவர்பாற் கேட்டு, கதையைமட்டும் எடுத்துக்கொண்டு, முதனூலில் இல்லாதனவற்றைக் கூட்டியும், உள்ளனவற்றிற் சிலவற்றை அங்குமிங்குந் திரித்தும், சிலவிஷயங்களைத் தள்ளியும் எழுதியது கம்பராமாயணம். வில்லிபுத்தூரார் வடமொழிப்பாரதத்தில் ஈற்றில்உள்ள எட்டுப்பருவத்தையும் முற்றுந்தள்ளினாரென்பதும், முதற்பத்துப்பருவத்திலும் கிளைக்கதைகள் பலவற்றை ஒதுக்கினார் என்பதும் முன்னுரையிற் கூறியுள்ளேன். வியாசர்பாரதத்தில் இல்லாதன சில வில்லிபாரதத்திற் காணலாம். உதாரணம் பழம்பொருந்துசருக்கம்.

இவ்வாறு இக்கவிசிரேஷ்டர் இருவரும்செய்தது பிழையோவெனின், பிழையன்று, வழிநூலாசிரியர் இப்படிச்செய்ய அதிகாரமுடையராகலின்.

இனி, சார்புநூல் என்பது முதனூல் வழிநூல் இரண்டனிலுங் கூறும் பொருளைத் தனக்குப்பொருளாக்கி அவற்றோடு ஒத்தும் அவற்றில் வேறுபட்டும் வருவது. சார்புநூலுக்குப் புடைநூலென்றும் பெயர்.

யான் எழுதிய இராமன்கதை, பாண்டவர்கதை இரண்டும் சார்புநூற்பாற்படும். சார்புநூலின் இலக்கணம் இஃது என அறிந்தவரும் என்னூல் சார்புநூல் என உணர்ந்தவரும், என்னூலில் யான் கூட்டியும் மாற்றியும் எழுதியவைகளிற் குற்றங்கூறுதற்கு இடம் சிறிதுமில்லை. இதனாலன்றே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து வித்துவானும், இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய கலாபண்டிதர் (Ph. D.) க. கணபதிப்பிள்ளை அவர்கள் யான் எழுதிய இராமன்கதையை வியந்து எழுதினார்கள். அன்றியும் இலங்கைநாட்டுச் சிறுவருக்குக் கல்வி பல்லாண்டு புகட்டின ஸ்ரீ நெவின்ஸ் செல்வத்துரை

Navaratri
(Nine nights of pujas for Shakti)

This event takes place during September-October period each year. The asuras were inflicting great hardship on human beings. The people complained to the Divine Mother to exterminate the asuras. The Divine Mother wanted three properties with which she was able to tackle the asuras. These properties were courage, wealth and knowledge. These aspects of the divine mother which she already possessed had to be polished and rejuvenated with pujas which were performed, divided into three nights for each aspect. The first three nights were for Durgha, goddess of courage, the middle three nights were for pujas to Lakshimi, the goddess of wealth, the last three days were for Sarasvati, goddess of knowledge. When these nine days of pujas were over, the divine mother with the three instruments of courage, wealth and knowledge attacked and destroyed the asura on the tenth day known as Vijayadasami (das-tenth) which is celebrated among the Andhras, and as Dasara festival in Mysore and other parts of India. This day was also known as man-ampu which means slaughtering an evil containing deer with an arrow, this execution is performed nowadays by the cutting of plantain trees with a knife denoting the slaughter of the asura or destruction of evils.